தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வலர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009

PRGI No. TNBIL/25/A1569
வைகறையில்
# பேப்பர்பாய்
www.paperboy.biz
VAIGARAIYIL PAPERBOY




சென்னை மலர்: 01 இதழ்: 196 27.02.2026 வெள்ளிக்கிழமை
Chennai Volume: 01 Issue: 197 Friday pages 8 Rs.5/-
DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY


## இன்றைய நாள்

வெள்ளிக்கிழமை
(27–02–2026)
விசுவாவசு ஆண்டு, மாசி–15
பிறை: வளர்பிறை
திதி
ஏகாதசி இரவு 10.50 வரை பிறகு துவாதசி.
நட்சத்திரம்:
திருவாதிரை காலை 11.05 வரை பிறகு புனர்பூசம்.
யோகம்
சித்தயோகம்
ராகுகாலம்
காலை 10.30–12.00 மணி
எமகண்டம்
பிற்பகல் 3.00 – 4.30 மணி
சூலம் – மேற்கு.
நல்ல நேரம் :
காலை 6–7 மணி.
மாலை 5–6 மணி

| | |
|---|---|
| மேஷம் | வரவு |
| ரிஷபம் | புகழ் |
| மிதுனம் | சிறப்பு |
| கடகம் | உறுதி |
| சிம்மம் | பண்பு |
| கன்னி | பரிசு |
| துலாம் | சிந்தனை |
| விருச்சிகம் | கவனம் |
| தனுசு | கடமை |
| மகரம் | பக்தி |
| கும்பம் | ஒய்வு |
| மீனம் | திடம் |

# டெல்லியில் இருந்து ஒருபோதும் தமிழகத்தை ஆளும் நிலை வரக்கூடாது

## முதல்வர் மு.க.ஸ்டாலின்




**நாகர்கோவிலில்,பிப்.27:**
டெல்லியில் இருந்து தமிழகத்தை ஆளும் நிலை ஒருபோதும் ஏற்படக் கூடாது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

நாகர்கோவில் கன்கார்டியா பள்ளி மைதானத்தில் நேற்று நடைபெற்ற அரசு விழாவில் ரூ.1,785.37 கோடி மதிப்பில் 1,217 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்துவைத்தும், 1,237 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், 3,12,082 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது:

நான் 50 ஆண்டுகள் தொடர் உழைப்பால் பேரியக்கத்தின் தலைவர் என்ற பொறுப்பை அடைந்திருக்கிறேன். வாக்களித்த மக்களுக்கு மட்டுமின்றி, வாக்களிக்காத மக்களுக்கும் சேர்த்துதான் உழைக்கிறேன். ஆனால், தேர்தல் நேரத்தில் மட்டும் சிலர் மக்களை வட்டமடிப்பார்கள். தேர்தல் சீசனில் பிரதமர் மோடி அடிக்கடி தமிழகத்துக்கு வருவார்.

ஏற்கெனவே வரத் தொடங்கிவிட்டார். இதனால் அவரது கூட்டணிக் கட்சியினரே பயப்படுகிறார்கள். எத்தனை முறை பிரதமர் இங்கு வருகிறாரோ, அந்த அளவுக்கு பெரிய வித்தியாசத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி தோல்வி அடையும். ஏனெனில், தமிழகத்துக்கு பிரதமர் ஒன்றுமே செய்யவில்லை என்பது மக்கள் ஞாபகத்துக்கு வரும்.

மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், குஜராத் மாநில மெட்ரோ திட்டத்துக்கு ஒப்புதல் வழங்கியிருக்கிறார்கள். ஆனால், தமிழகத்துக்கு ஏதுமில்லை. வரும் சட்டப்பேரவைத் தேர்தல் போட்டி தமிழகத்துக்கும், தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கும்தான். செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் இருந்துதான் தமிழகம் ஆளப்பட வேண்டும்.

டெல்லியில் இருந்து ஆளும் நிலை வரக்கூடாது. இதை தீர்மானிப்பதற்கான தேர்தல் இது. தமிழகத்தை அனைத்து வகையிலும் தாழ்த்தி, வீழ்த்த வேண்டும் என்று பாஜக கருதுகிறது. ஏனெனில், வளர்ச்சி இருக்கும் மாநிலங்களில் பாஜக இருக்காது. பாஜக இருந்தால் அங்கே வளர்ச்சி இருக்காது.

கிறிஸ்துமஸ் பண்டிகையின் போது நாடு முழுவதும் கிறிஸ்தவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. மகாராஷ்டிராவில் பிற்படுத்தப்பட்ட முஸ்லிம்களுக்கு இடஒதுக்கீடு ரத்து செய்யப்பட்டுள்ளது. மணிப்பூர் இன்னும் பற்றி எரிகிறது. அசாமில் பாஜக முதல்வர், முஸ்லிம்கள் மீது வெளிப்படையாக வெறுப்பை உமிழ்கிறார்.

இப்படி ஒரு நிலையை தமிழகத்திலும் ஏற்படுத்தவே தவிக்கிறார்கள். ஆனால், திராவிட மாடல் அரசில், மதநல்லிணக்கமும், ஒற்றுமையும் பேணப்படுகிறது.

வரலாற்றிலேயே இல்லாத எண்ணிக்கையாக 4,000 கோயில்களுக்கு குடமுழுக்கு செய்திருக்கிறோம். பாலபிரஜாபதி அடிகளார் உள்ளிட்ட உண்மையான ஆன்மிகப் பெரியோர்கள் நம்மைப் பாராட்டுகிறார்கள். இது பாஜகவின் கண்களை உறுத்திக்கொண்டே இருக்கிறது.

தமிழகத்துக்கு வரும் பிரதமர் இந்தக் கேள்விகளுக்கு பதில் சொல்வாரா? ஒருவர் நாட்டு மக்கள் எல்லோருக்கும் ரூ.15 லட்சம் தருவேன் என்று கூறியது போல, பழனிசாமியும் தற்போது வாய்க்கு வந்ததெல்லாம் கூறிக் கொண்டிருக்கிறார்.

தேர்தலைக் காரணம் காட்டி, மகளிர் உரிமைத்தொகையை 3 மாதத்துக்கு நிறுத்திவைத்து, மக்களுக்கு திமுக அரசு மீது அதிருப்தியை ஏற்படுத்தலாம் என்று சூழ்ச்சி செய்தார்கள்.


இதை தெரிந்துகொண்டு ரூ.5 ஆயிரத்தை முன்கூட்டியே வழங்கினோம். இந்த நடவடிக்கையால் மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். எதிர்க்கட்சிகள் நிலைகுலைந்து போயிருக்கிறார்கள். பாஜக என்ற டப்பா இன்ஜினை நம்பி அதிமுக இருக்கிறது. அதிமுக என்ற மூழ்கும் கப்பலை நம்பி பாஜக இருக்கிறது.

பூஜ்ஜியமும், பூஜ்ஜியமும் சேர்ந்தால், பூஜ்ஜியம்தான். ராஜ்ஜியம் கிடைக்காது. திராவிட மாடல் 'சூப்பர் பாஸ்ட்' இன்ஜின் 11.19 சதவீத வளர்ச்சியோடு அதிவேகமாக முன்னோக்கிச் செல்கிறது.

மீண்டும் தமிழகத்தில் திராவிட மாடல் 2.0 ஆட்சிதான் அமையும். நாட்டுக்கே வழி காட்டும் மக்கள் நலத் திட்டங்கள் தொடர, ஒன்றினைந்து வெல்வோம். இவ்வாறு முதல்வர் பேசினார்.

நிகழ்ச்சியில், அமைச்சர்கள் மனோ தங்கராஜ், கீதா ஜீவன், அனிதா ராதாகிருஷ்ணன், டிஆர்பி.ராஜா, விஜய் வசந்த் எம்.பி. எம்எல்ஏக்கள் பிரின்ஸ், ராஜேஷ்குமார், தாரகை கத்பர்ட், மேயர் மகேஷ், குமரி ஆட்சியர் அழகுமீனா, உணவு ஆணைய தலைவர் சுரேஷ் ராஜன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# இன்ஸ்டாவில் 10 கோடி பின்தொடர்பாளர்கள்! முதல் உலகத் தலைவர் மோடி!




**புதுடில்லி,பிப்.27:**
இன்ஸ்டாகிராமில் 10 கோடி பின்தொடர்பாளர்களை கடந்த முதல் உலகத் தலைவர் என்ற சாதனையைப் பிரதமர் நரேந்திர மோடி படைத்துள்ளார்.

பிரதமர் மோடிக்கு அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பைவிட இரண்டு மடங்கு அதிக பின்தொடர்பாளர்கள் இன்ஸ்டாகிராமில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 2014 ஆம் ஆண்டு மெட்டாவுக்குச் சொந்தமான இன்ஸ்டாகிராம் சமூக ஊடகப் பக்கத்தில் பிரதமர் மோடி கணக்கைத் தொடங்கினார்.

உலக அரசியல் தலைவர்களின் பிரதமர் மோடிக்கு அடுத்ததாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் 4.32 கோடி பின்தொடர்பாளர்களை கொண்டுள்ளார்.

இந்தோனேசிய அதிபர் பிரபோவோ சுபியாந்தோவை 1.5 கோடி பேரும், பிரேசில் அதிபரை 1.44 கோடி பேரும், துருக்கி அதிபரை 1.16 கோடி பேரும், அர்ஜென்டினா அதிபரை 64 லட்சம் பேரும் பின்தொடர்கிறார்கள்.

பிரதமர் மோடிக்கு அடுத்த இடங்களில் உள்ள 5 உலக அரசியல் தலைவர்களின் மொத்த பின்தொடர்பாளர்களைவிட மோடியை அதிக பேர் பின்தொடர்கிறார்கள்.

இந்திய அளவிலும் மோடிக்கும் மற்ற அரசியல் தலைவர்களின் பின்தொடர்பாளர்களின் எண்ணிக்கைக்கும் நிறைய இடைவெளி இருக்கின்றது. உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத்தை 1.61 கோடி பேரும், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியை 1.26 கோடி பேரும் பின்தொடர்கிறார்கள்.

# பிரதமர் மோடி நாளை தமிழகம் வருகை!



**புதுடில்லி,பிப்.27:**
பிரதமர் நரேந்திர மோடி 2 நாள் பயணமாக நாளை பிப்.28-ஆம் தேதி (சனிக்கிழமை) தமிழகம் வருகிறார்.

இதுகுறித்து பாஜக மேலிட வட்டாரங்கள் கூறியதாவது: பிரதமர் மோடி சென்னையில் உள்ள ஆளுநர் மாளிகையில் சனிக்கிழமை இரவு தங்குகிறார். மறுநாளான மார்ச் 1-ஆம் தேதி காலை புதுச்சேரிக்குச் சென்று அங்கு அரசு நிகழ்ச்சியில் பங்கேற்கிறார். பிறகு பாஜக ஏற்பாடு செய்துள்ள பொதுக்கூட்டத்தில் பிரதமர் உரையாற்றுவார்.


புதுச்சேரியில் நிகழ்ச்சிகளை முடித்துவிட்டு, மதுரைக்கு பிரதமர் செல்கிறார். திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் தரிசனம் செய்ய பிரதமர் திட்டமிட்டுள்ளார். தொடர்ந்து, மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை தொடங்க விழாவில் கலந்துகொண்டு, காணொலி மூலம் திட்டங்களைத் தொடங்கி வைக்கிறார். பின்னர், தேசிய ஜனநாயக கூட்டணி பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகிறார்.

இதற்கிடையே, மதுரையில் அரசு நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும்போது தெற்கு ரயில்வே தொடர்புடைய திட்டங்களை பிரதமர் தொடங்கி வைப்பார் என்று ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

அம்ருத் பாரத் திட்டத்தின் கீழ் மறுசீரமைக்கப்பட்ட மொரப்பூர், பொம்மிடி, பொள்ளாச்சி, காரைக்குடி, ஸ்ரீவில்லிபுத்தூர், சோழவந்தான், திருவாரூர், மணப்பாறை ஆகிய ரயில் நிலையங்கள் திறப்பு, தாம்பரம்-மங்களூரு, கோவை-தன்பாத், நாகர்கோவில்-சார்லப்பள்ளி, ராமேசுவரம்-மங்களூரு ஆகிய நிலையங்களுக்கு இடையே புதிய ரயில் சேவை அர்ப்பணிப்பு ஆகியவை இதில் அடங்கும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

பிரதமரின் தமிழகம், புதுச்சேரி வருகையை முன்னிட்டு பலத்த பாதுகாப்புக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக காவல் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

# ராகுல் காந்தி மார்ச் 5-ம் தேதி தமிழகம் வருகை



**சென்னை,பிப்.27:**
தமிழகத்தில் விரைவில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளது. இதையடுத்து அனைத்து அரசியல் கட்சிகளும் தீவிரமாக களத்தில் இறங்கியுள்ளன.

என்டிஏ கூட்டணிக்கு ஆதரவு திரட்டுவதற்காக மார்ச் 1-ம் தேதி பிரதமர் மோடி தமிழகம் வர உள்ளார். மேலும் அவர் திருப்பரங்குன்றம் சென்று சுவாமி தரிசனம் செய்வார் எனக் கூறப்படுவதால் தமிழக அரசியலில் பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது.

இந்தச் சூழலில் திமுக கூட்டணியில் பேச்சுவார்த்தைக்கு காங்கிரஸ் இன்னும் அழைக்கப்படவில்லை. இதனால் காங்கிரஸ் தலைவர்கள் சிலர் அதிருப்தியில் உள்ளனர்.

முதல்வர் ஸ்டாலினுடன் கே.சி வேணுகோபால் பேச்சுவார்த்தை நடத்திய பிறகும் இழுபறி நீடிக்கிறது. இப்படியான நிலையில், மார்ச் 5-ம் தேதி ராகுல் சென்னை வருவதாக தகவல் வெளியாகியிருக்கிறது.

அன்றைய தினம் காங்கிரஸ் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பொதுக்கூட்டத்தில் ராகுல் பேசுவார் எனக் கூறப்படுகிறது. அந்த பொதுக்கூட்டத்தில் ஒரு லட்சம் தொண்டர்கள் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

திமுக-வுடனான பேச்சுவார்த்தை நிறைவடைந்த பிறகு சோனியா காந்தி, கார்கே, ராகுல், பிரியங்கா என அனைத்து தலைவர்களும் தமிழகம் வந்து பிரச்சாரம் செய்ய உள்ளதாகக் கூறப்படுகிறது.

# திருப்பரங்குன்றத்தில் தேசிய பாதுகாப்பு படையினர் ஆய்வு

**மதுரை,பிப்.27:**
மதுரையில் மார்ச் 1-ல் நடைபெறும் தேசிய ஜனநாயக கூட்டணியின் தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி பேசுகிறார்.

தொடர்ந்து, மதுரை எய்ம்ஸ் கட்டிடம், புதிய ரயில் நிலையங்கள், புதிய சாலைப் பணிகள் திறப்பு விழாவில் பங்கேற்கிறார்.இதற்காக மண்டேலா நகரில் அரசியல் விழா, அரசு விழாவுக்கு 2 மேடைகள் அமைக்கும் பணிகள் நடந்து வருகின்றன.

இது தொடர்பாக மதுரை ஆட்சியர் பிரவீன்குமார், காவல் ஆணையர் லோகநாதன், எஸ்.பி. அரவிந்த் ஆகியோர் கொண்ட குழுவினர் ஆய்வு மேற்கொண்டு, அறிக்கை சமர்ப்பித்தனர்.

இதற்கு தேசிய பாதுகாப்புப் படையினர் ஒப்புதல் அளிக்காததால், அரசு விழாவை விமான நிலையம் அருகில் நடத்த முடிவெடுக்கப்பட்டது. இதற்காக தனியாக மேடையும் அமைக்கப்பட்டு வருகிறது. மேலும், பிரதமர் மோடி திருப்பரங்குன்றம் முருகன் கோயிலில் சுவாமி தரிசனம் செய்கிறார்.

இதையொட்டி, பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக திருப்பரங்குன்றம் கோயிலில் தேசிய பாதுகாப்பு படையைச் சேர்ந்த 8 பேர் அடங்கிய குழுவினர் நேற்று ஆய்வு மேற்கொண்டதுடன், காவல் ஆணையர் ஜெ.லோகநாதன், துணை ஆணையர் இனிகோ திவ்யன் ஆகியோருடன் ஆலோசனை நடத்தினர்.

# விமானத்தில் ஏசி பழுது: ஓடுபாதையில் விமானத்தை நிறுத்திவிட்டு விமானி சென்றதால் பயணிகள் தவிப்பு




**சென்னை,பிப்.27:**
சென்னையிலிருந்து சிங்கப்பூர் செல்ல இருந்த விமானத்தில் ஏசி இயங்காத நிலையில், ஓடுபாதையில் விமானத்தை நிறுத்திவிட்டு விமானி சென்றதால் 4 மணி நேரமாக பயணிகள் அவதிக்குள்ளாகினர்.

சென்னையிலிருந்து சிங்கப்பூர் செல்லும் இண்டிகோ ஏர்லைன்ஸ் விமானம் 198 பயணிகளுடன் நேற்று காலை 7.20 மணிக்கு புறப்படத் தயாரானது. விமானம் ஓடுபாதையில் ஓடுவதற்கு தயாரானபோது, விமானத்துக்குள் ஏசி வேலை செய்யாததால், பயணிகள் கூச்சல் போட்டனர்.

இதையடுத்து, விமானத்தில் கோளாறு இருப்பதாக கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் தெரிவித்துவிட்டு விமானி கீழே இறங்கிச் சென்றுவிட்டார். விமானத்தின் கதவுகள் திறக்கப்பட்டன.

சிறிது நேரத்தில் விமானத்தின் கோளாறு சரிசெய்யப்பட்டதால், விமானம் புறப்படும் என்று பயணிகள் எதிர்பார்த்தனர். ஆனால், நீண்ட நேரமாகியும் விமானத்தை இயக்க விமானி வராததால், பயணிகள் விமானத்துக்கு உள்ளேயே தவித்தனர்.


அப்போது மீண்டும் ஏசி நிறுத்தப்பட்டதால், விமானத்தின் திறந்திருந்த கதவுகள் வழியாக பயணிகள் கீழே இறங்க முயற்சி செய்தனர். ஆனால், விமானத்தில் லேடர் பொருத்தப்படாததால் கீழே இறங்க முடியவில்லை.

அதனால் பயணிகள் விமானத்துக்கு உள்ளேயே கோஷமிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். விமானத்தில் ஏசி மீண்டும் இயங்க தொடங்கினாலும், விமானி வராததால் 4 மணி நேரத்துக்கு மேலாக விமானத்துக்குள்ளேயே அமர்ந்திருந்தனர்.

ஒருகட்டத்தில் விமானத்திலிருந்து கீழே குதித்துவிடுவோம் என்று பயணிகள் தெரிவித்தனர். அங்கு வந்த மத்திய தொழில் பாதுகாப்புப் படையினர் பயணிகளை மிரட்டி விமானத்துக்குள் அனுப்பினர். பின்னர் விமானி வந்ததும், பகல் 11.40 மணிக்கு விமானம் சிங்கப்பூருக்கு புறப்பட்டுச் சென்றது.

நடந்த சம்பவங்களை பயணிகள் வீடியோ எடுத்து சமூக வலைதளங்களில் பதிவு செய்து, இதுகுறித்து இந்திய சிவில் விமான போக்குவரத்துத் துறை அமைச்சகம் விசாரணை மேற்கொண்டு, உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் தெரிவித்துள்ளனர். இந்த சம்பவத்தால் சென்னை விமான நிலையத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

Follow our WhatsApp Channel
Scan this QR code using the CAMERA to view or follow our Channel
PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper
WhatsApp channel



## ஸ்ரீசத்குரு சாய்பாபா தியான ஆலயத்தில் சிறப்பு ஆரத்தி அலங்காரம்

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தென்பாதியில் அமைந்துள்ள ஸ்ரீசத்குரு சாய்பாபா தியான ஆலயத்தில் வியாழக்கிழமை சிறப்பு ஆரத்தி மற்றும் அலங்காரம் நடைபெற்றது.

# நல்லகண்ணு உடலுக்கு 72 குண்டுகள் முழங்க அரசு மரியாதை

**சென்னை, பிப்.27:**

இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மூத்த தலைவரான நல்லகண்ணு தனது 101-வது வயதில் நேற்று மரணம் அடைந்தார். சுதந்திர போராட்ட வீரராக திகழ்ந்த நல்லகண்ணு எளிமையின் சிகரமாக விளங்கியவர் ஆவார்.

பணம், பொருள் என எதற்கும் ஆசைப்படாமல் மக்கள் நலன் சார்ந்த போராட்டங்களை முன்னெடுத்து மிகவும் சாதாரணமாக எளிய வாழ்க்கையை வாழ்ந்துள்ள நல்லகண்ணு அனைவருக்கும் முன்னுதாரணமாகவே போற்றப்பட்டு வருகிறார்.

சென்னை ராஜீவ்காந்தி அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த நல்லகண்ணு முதுமை காரணமாக உயிர் இழந்ததை தொடர்ந்து தி.நகரில் உள்ள இந்திய கம்யூனிஸ்டு கட்சி அலுவலகத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக அவரது உடல் வைக்கப்பட்டது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் நேற்று நேரில் சென்று நல்லகண்ணுவின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினார்கள். மத்திய மந்திரி எல்.முருகன், பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான்,





தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப் பெருந்தகை, விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன் உள்ளிட்ட பல்வேறு தலைவர்களும் நல்லகண்ணு உடலுக்கு நேற்று அஞ்சலி செலுத்தினார்கள். தமிழக வெற்றிக் கழக தலைவரான விஜய்யும் நேரில் சென்று நல்லகண்ணுவின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினார். அப்போது த.வெ.க. நிர்வாகிகள் என்.ஆனந்த், ஆதவ்அர்ஜூனா, நிர்மல்குமார் ஆகியோரும் அஞ்சலி செலுத்தினார்கள்.

இந்த நிலையில் நடிகர் ரஜினிகாந்த் இன்று தி.நகரில் உள்ள இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் அலுவலகத்திற்கு நேரில் சென்று நல்லகண்ணுவின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினார். அப்போது அவர் நல்லகண்ணுவை பற்றி உருக்கமான கருத்துக்களையும் தெரிவித்தார்.

கவிஞர் வைரமுத்து, நடிகர்கள் சத்யராஜ், நாசர், சூர்யா, கார்த்தி, சிவகார்த்திகேயன், திரைப்பட இயக்குநர்கள் ரவிக்குமார், வெற்றிமாறன், பா.ரஞ்சித் மற்றும் திரை உலகை சேர்ந்த பல்வேறு முக்கிய பிரமுகர்களும் நல்லகண்ணு உடலுக்கு அஞ்சலி செலுத்தினார்கள்.


ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, அவரது மகன் துரை வைகோ எம்.பி., தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா மற்றும் சமத்துவ மக்கள் கழக நிறுவனத் தலைவர் எர்ணாவூர் நாராயணன் ஆகியோரும் இன்று நல்ல கண்ணுவின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினார்கள். அப்போது வைகோ நல்ல கண்ணுவின் புகழை போற்றும் வகையில் கைகளை உயர்த்தி கோஷங்களையும் எழுப்பி கண்ணீர் வடித்தார். இதனை தொடர்ந்து பலரும் அஞ்சலி செலுத்தினர்.

நல்லகண்ணு தனது உடலை ஆஸ்பத்திரிக்கு தானமாக கொடுத்துள்ளார். இதன் காரணமாக அவர் உயிர் இழந்தவுடன் நேற்று உடனடியாக பதப்படுத்தப்பட்டது. இதன் பிறகே அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. இன்று பிற்பகல் 3 மணி வரையில் நல்லகண்ணு உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதைத் தொடர்ந்து நல்லகண்ணு உடலுக்கு 72 குண்டுகள் முழங்க அரசு மரியாதை செலுத்தப்பட்டது. இதற்கு முன்னதாக, 'வீர வணக்கம் வீர வணக்கம்! வாழ்நாள் போராளிக்கு வீர வணக்கம்! தகைசால் தமிழருக்குச் செவ்வணக்கம்!' என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முழக்கமிட மற்றவர்கள் அதனை கூறினர். இதன் பிறகு நல்லகண்ணுவின் உடல் ஊர்வலமாக எடுத்து செல்லப்படுகிறது. தி.நகரில் உள்ள இந்திய கம்யூனிஸ்டு அலுவலகத்தில் இருந்து அண்ணா சாலை வழியாக இறுதி ஊர்வலத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. இந்த ஊர்வலம் சென்னை ராஜீவ் காந்தி அரசு ஆஸ்பத்திரியை சென்றடைகிறது.

பின்னர் முறைப்படி நல்லகண்ணுவின் உடல் ஆஸ்பத்திரி தலைமை நிர்வாகிகளிடம் தானமாக ஒப்படைக்கப்பட உள்ளது.

## வேதாரண்யத்தில் உப்பு உற்பத்தி தொடங்கியது




**வேதாரண்யம், பிப்.27:**

தமிழகத்தில் உப்பு உற்பத்தியில் நாகை மாவட்டம் வேதாரண்யம் 2-வது இடத்தில் உள்ளது. வேதாரண்யம், அகஸ்தியன்பள்ளி, கடினல்வயல், கோடியக்காடு பகுதியில் ஆண்டுதோறும் சுமார் 9 ஆயிரம் ஏக்கரில் உப்பு உற்பத்தி நடைபெற்று வருகிறது.

வேதாரண்யம் பகுதியில் இந்த ஆண்டு உப்பு உற்பத்திக்கான பராமரிப்பு பணி இரண்டு வாரங்களாக நடைபெற்று வந்தது. இந்த பணிகள் நிறைவுற்ற நிலையில் தற்போது வேதாரண்யம் பகுதியில் வெயில் சுட்டெரிக்க தொடங்கி உள்ளது. கடந்த ஒரு வாரமாக வெயில் அதிகளவில் அடிக்க தொடங்கிய நிலையில் இன்று முதல் உப்பு உற்பத்தி தொடங்கி உள்ளது. இதையொட்டி உப்பு பாத்திகளில் உப்பு வார் முதல் தொடங்கப்பட்டுள்ளது.

உப்பள பாத்திகளில் இருந்து உப்புவாரும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். வார்முதல் செய்த உப்பை சேமிக்கும் பணியிலும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். தொடர்ந்து மழை இல்லாமல் வெயில் அடித்தால் இந்த ஆண்டு உப்பு உற்பத்தி நன்றாக இருக்கும் என உப்பு உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## தனியார் பொழுதுபோக்கு பூங்காவில் விபத்து: கல்லூரி மாணவி படுகாயம்



**சென்னை, பிப்.27:**


சென்னை நீலாங்கரை அடுத்த ஈஞ்சம்பாக்கத்தில் உள்ள விஜிபி பொழுதுபோக்கு பூங்காவில் ஏற்பட்ட விபத்தில் கல்லூரி மாணவி படுகாயம் அடைந்துள்ளார்.


சீட் பெல்ட் அணிவதற்குள் ராக் அண்டு ரோல் ராட்டினத்தை இயக்கியதால் கல்லூரி மாணவி கீழே விழுந்து படுகாயமடைந்தார்.

சென்னை ராயபுரத்தைச் சேர்ந்த கல்லூரி மாணவி ஜப்ரீன் பாத்திமா கீழே விழுந்து படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ராட்டினத்தை அஜாக்கிரதையாக இயக்கியதாக தனியார் பொழுதுபோக்கு பூங்கா ஊழியர்கள் இருவரை போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## தவெகவிற்கு சென்றவர்கள் அதிமுகவிற்கு வர உள்ளனர் – எஸ்.பி.வேலுமணி





**சென்னை, பிப்.27:**

தமிழக வெற்றிக்கழகம் என்ற கட்சியை தொடங்கிய விஜய் வரும் சட்டமன்ற தேர்தலில் தனித்து போட்டியிடுகிறார். இதனிடையே அதிமுகவில் இருந்து நிறைய தலைவர்கள் தவெகவில் இணைந்து வருகின்றனர்.

அதிமுக முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் தவெகவில் இணைந்தார். இதையடுத்து அதிமுக முன்னாள் எம்எல்ஏ ஜே.சி.டி பிரபாகர் மற்றும் சபாநாயகர் தனபால் மகன் லோகேஷ் தமிழ்செல்வன் ஆகியோர் தவெகவில் இணைந்தனர்.

இந்நிலையில், கோவையில் பேசிய அதிமுக முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி, "அதிமுகவில் இருந்து தவெகவுக்கு சென்றவர்கள் தற்போது அங்கு உரிய அங்கீகாரம் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதே பதவியும், மரியாதையும் வழங்கப்பட்டால் மீண்டும் அதிமுகவிற்கே வர அவர்கள் தயாராக உள்ளனர்" என்று தெரிவித்தார்.

எஸ்.பி.வேலுமணியின் இந்த பேச்சு அரசியல் வட்டாரத்தில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

## வேலூர் விஐடி பல்கலைக்கழகத்தில் ரிவேரா கலை விழா மாரத்தான் போட்டி

**வேலூர், பிப்.27:**

வேலூர் விஐடி பல்கலைக் கழகத்தில் ரிவேரா 2026, கலை விழாவை முன்னிட்டு நேற்று நடைபெற்ற மாரத்தான் போட்டியில் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பங்கேற்றனர். விஐடி பல்கலைக்கழகத்தில் -ரிவேரா கலை விழா- இன்று தொடங்கி மார்ச் 1-ம் தேதி வரை நடைபெறுகிறது. இதன் ஒரு பகுதியாக விஐடி பல்கலைக்கழக வளாகத்தில் பசுமை மாரத்தான் போட்டி நடைபெற்றது.

விஐடி துணை தலைவர் சேகர் விசுவநாதன் கொடியசைத்து மாரத்தான் போட்டியை தொடங்கி வைத்தார். இதில் 2700 மாணவர்கள், 1200 மாணவிகள் மற்றும் 500-க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள், ஊழியர்கள் பங்கேற்றனர்.

விஐடி பல்கலைக்கழக வளாகத்தில் தொடங்கிய மாரத்தான் போட்டி சேவூர் வரை சென்று மீண்டும் விஐடி பல்கலைக்கழகத்தில்




நிறைவடைந்தது. சுமார் 10 கி.மீ. தொலைவு கொண்ட மாரத்தான் போட்டியில் மாணவர்கள் பிரிவில் இஷான் முதல் இடத்தை பிடித்தார். பாஸ்கர் இரண்டாம் இடத்தையும், பிரணாய் மூன்றாம் இடத்தையும் பிடித்தார்.

மாணவிகள் பிரிவில் ஆயுஷி ஜெயின் முதல் இடத்தை பிடித்தார். பொன்மணி 2-ம் இடத்தையும், மரியா 3-ம் இடத்தையும் பிடித்தார். உடற்கல்வி இயக்குநர் மங்கையர்க்கரசி அருண் மற்றும் ரிவேரா ஒருங்கிணைப்பாளர் பெல்வின் எட்வர்ட் மற்றும் ஆசிரியர்கள், ஊழியர்கள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

மாரத்தான் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு நேற்று மாலையில் விஐடி வேந்தர் முனைவர் கோ.விசுவநாதன் தலைமையில் நடைபெறும் ரிவேரா தொடக்க விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ளும் இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் மிதாலி ராஜ் பரிசுகளை வழங்க உள்ளார்.

## ரெயில் டிக்கெட் இருந்தால் போதும்... சிறப்பு பேருந்துகளில் இலவசமாக பயணிக்கலாம்!

**சென்னை, பிப்.27:**

எழும்பூர் ரெயில் நிலையத்தில் பராமரிப்பு பணிகள் நடைபெறுவதால் மின்சார ரெயில் சேவை குறைக்கப்பட்டு உள்ளது. இதனால் புறநகர் மின்சார ரெயில் பயணிகளுக்கு பல்வேறு சிரமங்கள் ஏற்பட்டு உள்ளன.

இதை அடுத்து மின்சார ரெயில் பயணிகளுக்கு கூடுதலாக ரெயில் சேவைகளை தெற்கு ரெயில்வே அதிகரித்து வருகிறது. மேலும் பஸ் சேவைகளையும் தற்போது கூட்டி உள்ளது.

அதன்படி தாம்பரம்- கடற்கரை இடையே நேற்று முதல் கூடுதலாக 40 சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகிறது. தலைமைச் செயலகம், எழிலகம் உள்ளிட்ட பல்வேறு பகுதியில் உள்ள அரசு அலுவலகங்களுக்கு செல்லக்கூடிய வகையில் இந்த சேவை அளிக்கப்படுகிறது.

தாம்பரம் ரெயில் நிலையத்தில் இருந்து காலை 6.30 மணி முதல் 8.43 மணி வரை 7 நிமிட இடைவெளியில் கிண்டி, அண்ணாசாலை, சேப்பாக்கம், தலைமை செயலகம், தி.நகர், எழும்பூர், சென்ட்ரல், பாரிமுனை வழியாக இந்த பஸ்கள் இயக்கப்படுகிறது.இதேபோல கடற்கரை ரெயில் நிலையத்தில் இருந்து மாலை 5 மணி முதல் இரவு 7.13 மணி வரை கூடுதல்





பஸ் சேவை வழங்கப்படுகிறது. மாலையில் வேலை முடிந்து வீடுகளுக்கு திரும்புவதற்கு வசதியாக மாநகர பஸ்கள் இயக்கப்படுகின்றன. இரு மார்க்கத்திலும் தலா 20 பஸ் சேவைகள் தொடங்கி உள்ளன.இதனிடையே, கூடுதலாக இயக்கப்பட்டுள்ள சிறப்பு பஸ்களில் ரெயில்வே மாதாந்திர பாஸ் வைத்திருப்போர், ரெயில் டிக்கெட் வைத்திருந்தாலும் இந்த பேருந்துகளில் இலவசமாக பயணிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தகைய பேருந்துகளின் கண்ணாடிகளில் *SOUTHERN RAILWAY CHARTERED BUS* என்ற அறிவிப்பு நோட்டீஸ் ஒட்டப்பட்டுள்ளது. இந்த பேருந்துகளில் டிக்கெட் பரிசோதகர் சோதனை செய்வார் என்றும் கூறப்பட்டுள்ளது.

## தனியார் பால் விலை லிட்டருக்கு 2 ரூபாய் உயர்வு

**சென்னை, பிப்.27:**

தமிழ்நாட்டில் பால் விற்பனை செய்யும் தனியார் நிறுவனங்கள் பால் விலையை உயர்த்தி உள்ளன. ஆரோக்கியா நிறுவனம் கடந்த 21-ந்தேதி பால் மற்றும் தயிர் விலையை லிட்டருக்கு 2 ரூபாய் உயர்த்தியது.

கொழுப்பு சத்து செறிவூட்டப்பட்ட பால் ஒரு லிட்டர் 76 ரூபாயிலிருந்து 78 ரூபாய் ஆகவும், டீ ஸ்பெஷல் பால் 68-ல் இருந்து 70 ஆகவும் நிலைப்படுத்தப்பட்ட பால் 66 ரூபாயில் இருந்து 68 ஆகவும்



சமன்படுத்தப்பட்ட பால் 60 ரூபாயில் இருந்து 62 ஆகவும் இருமுறை சமன்படுத்தப்பட்ட பால் 48 ரூபாயில் இருந்து 50 ஆகவும் உயர்ந்துள்ளது.

தனியார் பால் விலை உயர்ந்து உள்ளதால் அதனைப் பயன்படுத்திய பொதுமக்கள் ஆவின் பாலுக்கு மாறி வருகிறார்கள். தனியார் பால் விலையை விட ஆவின் பால் விலை லிட்டருக்கு 18 ரூபாய் குறைவாக உள்ளது.

அரை லிட்டருக்கு 10 ரூபாய் குறைவாக இருப்பதால் பெரும்பாலானவர்கள் ஆவின் பால் வாங்குவதில் ஆர்வமாக உள்ளனர்.

இதனால் ஆவின் பாலுக்கு தற்போது கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கடைகளில் வந்தவுடன் உடனே விற்று தீர்ந்து விடுகின்றன.

## அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஆண்டு விழா, பள்ளி மாணவர்களுக்கு பரிசளிப்பு





**திருவண்ணாமலை , பிப்.27:**

திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஆண்டு விழாவில் பள்ளி ஆசிரியர் முனைவர் மு. பிரசன்னா அவர்கள் தலைமையேற்று மாணவர்கள் கல்வியோடு தங்கள் தனித் திறன்களையும், நல்லொழுக்கத்தையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று உரையாற்றினார்.

பள்ளி உதவித் தலைமை ஆசிரியர் திரு.அ.கேசவன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். உதவித் தலைமை ஆசிரியர் திரு.ஏ.ராமமூர்த்தி அவர்கள் ஆண்டறிக்கையை வாசித்தார் .ராணிப்பேட்டை அரசு கலைக்கல்லூரியின் ஓய்வு பெற்ற முதல்வர் முனைவர் வே.நெடுஞ்செழியன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு மாணவர்களிடையே கவிதை நடையில் மாணவர்கள் கடைபிடிக்க வேண்டிய நல்ல பழக்க வழக்கங்கள் குறித்தும், அவர்களது பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களை மதித்து நடக்க வேண்டும் என்றும், கல்வியோடு ஒவ்வொருவருக்குள்ளும் மனிதம் தழைத்தோங்க வேண்டும் என்றும் உரையாற்றினார்.


பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர் திரு. சௌந்தர பாண்டியன் அவர்கள்,ஆசிரியர்கள் திருமதி க. விமலாதேவி அவர்கள் வி. எஸ்.ராஜேந்திரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். இவ்விழாவில் நீரைப் காப்போம் என்ற பொருளில் மௌன நடிப்பு ,கோலாட்டம், சிலம்பாட்டம், பரதநாட்டியம் உள்ளிட்ட பல்வேறு கலை நிகழ்ச்சிகளை மாணவர்கள் அருமையாக அவர்களுடைய திறமைகளை வெளிப்படுத்தினார்கள்.


விழாவில் தொடர்ந்து பள்ளிக்கு வருகை புரிந்த மாணவர்களுக்கும், அரையாண்டுத் தேர்வில் முதலிடம் இரண்டாம் இடம் பெற்ற மாணவர்களுக்கும், பல்வேறு கலை நிகழ்ச்சிகளில் பங்கு பெற்ற மாணவர்களுக்கும், விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது. ஆண்டு விழா மிக சிறப்பாக நடைபெற்றது.

பட்டதாரி ஆசிரியர் திரு. ஏ. முருகன் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். உதவித் தலைமை ஆசிரியர் திருமதி. கே.சக்தி பாலா அவர்கள் நன்றி கூறினார்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலாஸ்ரீதர் திருவண்ணாமலை**

## இந்து சமய அறநிலை துறை சார்பில் கட்டப்பட்டு வரும் திருமண மண்டபத்தை துணை சபாநாயகர் நேரில் ஆய்வு





திருவண்ணாமலை மாவட்டம் துரிஞ்சாபுரம் ஒன்றியத்தைச் சேர்ந்த மங்கலம் ஊராட்சியில் இந்து சமய அறநிலைத்துறை சார்பில் கட்டப்பட்டு வரும் திருமண மண்டபத்தை மாண்புமிகு துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி அவர்கள் நேரில் சென்று ஆய்வு செய்தார். உடன் துரிஞ்சாபுரம் ஒன்றிய செயலாளர் வி.பி. அண்ணாமலை அவர்கள் மற்றும் கழகத் தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் ஆய்வில் கலந்து கொண்டார்கள். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.




















ADIYOGI

REAL ESTATE WHOLESALE

VADACHENNAI CALL DRIVER



ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ரூவல்
வீட்டுமனைகள் விற்பனை
_CONTACT_
8939228901




































# கவிதை அரங்கம்!





காதலின்
வெளிபாடுதான்
முத்தமென்றால்
நாமும்
பரிமாறிக்கொள்வோம்
முத்தங்களை
விழிகளை இதழ்களாக்கி


கண்களில் தொடங்கி
கட்டிலறையில்
முடிவதல்ல காதல்
மனதில் மலர்ந்து
மணவறை சென்று

மரணம்வரை
உடனிருப்பதே
உண்மை காதல்

உன்னில் நானும்
என்னுள் நீயுமாக
வாழும் நமக்கு
தினமும் காதலர் தினமே

எந்த தினம்
என்றாலும் அனுதினமும்
அவனுடன் இருந்தால்
காதலர்தினம் தான்...!

# வாழ்க்கை தத்துவம்...



வாழ்க்கை என்பது நீ சாகும் வரை அல்ல, நீ மற்றவர்கள் மனதில் வாழும்வரை.

அனுபவத்தால் உணரவேண்டிய ஒன்றை ஆயிரம் தத்துவ ஞானிகளாலும் உணரவைக்க முடியாது.

உன் மனம் ஒன்றே உன்னை வீழ்த்தக்கூடிய ஒரே ஆயுதம். அது தெளிவாக இருக்கும் வரையில் நீ ஒருவராலும் வீழ்த்தப்படுவதில்லை.

உனக்கு நீ நல்லவனாய் இருந்தால் போதும், மற்றவருக்கு நீ கெட்டவனாய் தெரிந்தால் அது உன் குற்றம் இல்லை. கண்ணில் பிழை என்றால் பிம்பமும் பிழையே. அது பார்க்கப்படுபவன் பிழையல்ல, பார்ப்பவன் பிழை.

யாரை நீ வெறுத்தாலும் உன்னை மட்டுமாவது நேசிக்க கற்றுக்கொள். ஏனெனில் இந்த உலகிலேயே மிக மிக சிறந்த காதல் உன்னை நீ நேசிப்பதுதான்.

# கேள்வி

சீரியல் செட்டுக்களாலும் பூக்களாலும் அலங்கரிப்பட்டிருந்த வீட்டைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தான் எழில். அந்த ரசிப்பில் இது என் சொந்த வீடு கஷ்டப்பட்டு என் கடின உழைப்பில் உருவான வீடு என்ற கர்வம் நிறைந்திருந்தது.

இன்று புதுமனை புகு விழா. இன்னும் சிறிது நேரத்தில் உறவினர்கள் நண்பர்கள் எல்லாரும் வந்து விடுவார்கள். அனைவரையும் பிரமாதமாகக் கவனித்து அசத்தி விட வேண்டும் என்று மனைவி நிர்மலாவிடம் சொல்லி இருந்தான் எழில்.

வேலை கிடைத்ததில் இருந்தே சொந்த வீடு என்பது அவனது கனவாக இருந்தது. கனவை நனவாக்கக் கடினமாக உழைத்தான். காதல் திருமணம் செய்ததால் ஒதுக்கிய உறவினர்கள் கூட அவனை மதித்து கிரகப் பிரவேசத்துக்கு வர இருப்பது எழிலுக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

"என்னப்பா எழில்! எப்படியோ சாதிச்சுக் காட்டிட்டே! உன் அம்மாவும் அப்பாவும் இருந்திருந்தா ரொம்ப சந்தோஷப்பட்டு இருப்பாங்க. காலம் ரொம்ப கொடுமையானது. உன்கிட்ட இருந்து அவங்களை பிரிச்சிடுச்சு" என்று சொல்லிக் கொண்டே வந்தார் அவனுடைய மாமா சதாசிவம்.

'வந்திருந்த சொந்தங்கள் அனைவரையும் மூன்றாவது படிக்கும் தன் மகன் பிரேமுக்கு அறிமுகப்படுத்திவிட வேண்டும். இப்போது இருந்தே அவனுக்கு நம் சொந்தங்கள் எல்லாம் யார் யார் என்பது தெரிய வேண்டும்' என்று ஒவ்வொருவரிடமும் அழைத்துச் சென்று அவர்கள் யார் என்பதை அவனுக்கு சொல்லிப் புரிய வைத்தான். முதலில் மாமா சதாசிவத்தை அறிமுகப்படுத்தியவன் வரிசையாக உறவினர்கள் அனைவரைப் பற்றியும் அவனுக்கு விளக்க ஆரம்பித்தான்.

ஒன்றும் புரியாமல் திருதிருவென அனைவரையும் பார்த்த பிரேம் "எங்கிருந்தெல்லாமோ யார் யாரோ வந்திருக்காங்க .இங்கேயே இருந்த நம்ம தாத்தா பாட்டி எங்கே அப்பா? " என்று --சென்ற வாரம் அவர்களை முதியோர் இல்லத்தில் சேர்த்து விட்டதை அறியாத -- கேட்ட கேள்வியில் ஆடிப் போன எழில் தன் தவறை உணர்ந்து முதியோர் இல்லத்தை நோக்கி வேகமாகக் கிளம்பினான்

**மு.மதிவாணன்**
குபேந்திரன் நகர்
அரூர் 636903

# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*பேனை தொடைச்சி பரண்ல இருந்த சாமானை எல்லாம் இறக்கி, ஏத்தி, சுண்ணாம்பு அடிச்சு.. வீட்டைக் கழுவி.. ஒரு வாய் பொங்கல் சாப்பிடுறதுக்கு இந்த வீட்ல என்னவெல்லாம் பண்ண வேண்டியிருக்கு?*



# தினம் ஒரு சமையல்



## பாசிப்பருப்பு பீன்ஸ் பொரியல்

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| பீன்ஸ் | - 400 கிராம் |
| பாசிப்பருப்பு | -1/4 கப் அளவு |
| வெங்காயம் | -2 |
| அளவு எண்ணெய் | -1/4 கப் |
| துருவிய தேங்காய் | -1/2 மூடி |
| கடுகு | -1 ஸ்பூன் |
| கருவேப்பிலை | -10 |
| மிளகாய் தூள் | -1/2 ஸ்பூன் |
| மஞ்சள் தூள் | -1/4 ஸ்பூன் |

**செய்முறை:**



பீன்ஸை பொடியாக நறுக்கிக் கொள்ளவும் இதனை குக்கரில் சேர்த்து கூடவே பாசிப்பருப்பு சேர்த்து அரை டம்ளர் தண்ணீர் விட்டு இரண்டு விசில் வேக வைக்கவும்.

ஸ்டவ் வில் பாத்திரத்தை வைத்து எண்ணெய் ஊற்றி கடுகு கருவேப்பிலை நறுக்கிய வெங்காயம் சேர்த்து தாளிக்கவும்.

வெங்காயம் வதங்கியதும் வேகவைத்த பீன்ஸ் மிளகாய் தூள் மஞ்சள் தூள் உப்பு சேர்த்து தண்ணீர் வற்றும் வரை சமைக்கவும். துருவிய தேங்காய் சேர்த்து ஒரு நிமிடம் அடுப்பில் வைத்து தீயை நிறுத்தவும்.

# முக்கம்பாலை பயன்கள்



மரங்கள் இயற்கையின் கொடை. மனிதர்களுக்கு ஏற்படும் நோய்களை போக்கும் மருந்துகள் மரத்தில் இருப்பதால்தான் எண்ணற்ற சித்தர்கள் காடுகளில் வசித்து வந்துள்ளனர். இயற்கையோடு வாழ்ந்து உடலுக்குத்தேவையான மருந்துகளை கண்டுபிடித்து நமக்கு அளித்துள்ளனர்.

உயரமான கிளைகளை உடைய முக்கம்பாலை மரம் மருத்துவ கொண்டது. இந்த மரத்தின் மலர்கள் பசும் வெண்மை நிறத்தை கொண்டவை. மணமுடையவை. கனிகள் மெலிந்த வெடிகனி. காம்பிலிருந்து கொத்தாக தொங்குபவை. விதைகள் பழுப்புநிறமுடையவை. முக்கம்பாலையின் இலைகள், பட்டை மற்றும் கட்டை மருத்துவ குணம் கொண்டவை. இந்தியாவில் இமயமலையின் அடிப்பகுதி, பீகார், அந்தமான் ஆகிய பகுதிகளில் காணப்படுகிறது.

செயல்திறன்மிக்க வேதிப்பொருட்கள்: இத்தாவரத்தின் மருத்துவ குணங்களுக்கு அடிப்படையாக உள்ளவற்றில் டிடாமைன், அல்ஸ்டோமைன், பிக்ரினைன், ராசிமைனைன் முக்கியமானவை.

பெரி-பெரி நோய்குணமாகும்: இலைகளின் கசாயம் பெரி-பெரி என்னும் தோல்நோய்க்கும், கல்லீரல் அடைப்புக்கும் மருந்தாகும் இதன் இலைகளை கசக்கி எண்ணெயில் சூடுபடுத்தி உள்ளுக்குள் தர நீர்க்கோவை நோய் குணமடையும். இலையை அரைத்து பற்றுப்போட நாட்பட்ட புண்கள் குணமடையும்.

குழந்தை பேற்றுக்குப்பின்னர் பெண்களுக்கு இலையின் சாறு இஞ்சியுடன் சேர்ந்து கலந்து கொடுக்கப்படும். இது பால் சுரத்தலை ஊக்குவிக்கும். சதையை இறுக்கும். தூக்கமின்மையை போக்கி நல்ல உறக்கத்தை தரும்.

ஜீரணமண்டல நோய் குணமடையும்: முக்கம்பாலை மரத்தின் பட்டை வயிற்றுப்பூச்சிகளை கொல்லும். வயிற்றுப்போக்கு, மலேரியா ஆகியவற்றிற்கு எதிரானாது. ஜீரண மண்டல நோய்களைத் தீர்க்க வல்லது.

மரத்தின் பால் காது வலியின் போது எண்ணெய் கலந்து மருந்தாக ஊற்றப்படுகிறது. மூட்டுவலி, பல்வலி, தோல்கட்டிகள் புண்களின் மேல் பூச்சாக உதவுகிறது. மரத்தின் கட்டையினை நீருடன் சேர்த்து மூட்டுவலி மற்றும் காயங்களுக்கு பயன்படுகிறது. இத்தாவரத்துடன் வேறுபல தாவரங்களையும் சேர்த்து அமிர்த அரிஷ்டா என்னும் மருந்து தயாரிக்கப்படுகிறது. இது காய்ச்சல் நோய்க்கு மருந்தாகும்.

# சினிமா

## திருமணம் செய்யப்போகும் விஜய் தேவரகொண்டா-ராஷ்மிகா இருவருக்கும் உள்ள வயது வித்தியாசம்... எவ்வளவு தெரியுமா?



பிரபலங்கள் என்றாலே ஸ்பெஷல் தான், அதிலும் மக்கள் கொண்டாடிய பிரபலங்கள் நிஜத்தில் இணைகிறார்கள் என்றால் அது மக்களுக்கு மிகுந்த சந்தோஷம்.

அப்படி திரையில் பார்த்து ரசித்த ஒரு சூப்பர் ஜோடி தான் இப்போது நிஜத்தில் இணைய உள்ளனர். அவர்கள் யார் என்பது உங்களுக்கே தெரியும், விஜய் தேவரகொண்டா மற்றும் ராஷ்மிகா தான்.

படங்களில் நடித்த போது காதல் ஏற்பட தங்களது காதலை ரகசியமாக வைத்துக்கொண்டிருந்தவர்கள் இப்போது தம்பதிகளாக மாற உள்ளனர்.

உதய்பூரில் திருமண கொண்டாட்டங்கள் அட்டகாசமாக நடந்து வருகிறது. சில புகைப்படங்கள், வீடியோக்கள் வெளியாகிய வண்ணம் உள்ளன.


இருவரும் திருமணம் செய்துகொள்ள உள்ள நிலையில் அவர்களின் வயது குறித்த விவரம் சமூக வலைதளங்களில் வலம் வருகிறது.

விஜய் தேவரகொண்டா 1989, மே 9ம் தேதி பிறந்துள்ளார், 36 வயது ஆகிறது. ராஷ்மிகா மந்தனா 1996ம் ஆண்டு ஏப்ரல் 5ல் பிறந்துள்ளார், 29 வயது ஆகிறது. இருவருக்கும் இடையே சுமார் 7 வயது வித்தியாசம் உள்ளது.



பிரிகிடா சகா ஆரம்பகட்டத்தில் ஹோம்லியாக மட்டுமே நடித்தார். இன்ஸ்டாவில் அவர் வெளியிடும் போட்டோக்களும் ஹோம்லியாகவே இருக்கும். தற்போது அவரும் கிளாமர் பக்கம் சென்றுவிட்டார். கிளாமர் ஆகவும் இன்ஸ்டாவில் போட்டோக்கள் வெளியிட தொடங்கி இருக்கிறார். இப்போது அவர் கோட் சூட்டில் ட்ரெண்டியாக போட்டோஷூட் எடுத்திருக்கிறார். இதோ பாருங்க.

## தனது நீண்டநாள் காதலியை திருமணம் செய்துகொண்ட பிரபல ராப் பாடகர் வேடன்... போட்டோ இதோ



சினிமாவில் இப்போதெல்லாம் நடிகர்களை தாண்டி மற்ற விஷயங்களில் பணிபுரியும் கலைஞர்களும் மக்களிடம் பிரபலமாகி வருகிறார்கள்.

அப்படி பாடகர்களுக்கு இப்போது பெரிய அளவில் வரவேற்பு கிடைத்து வருகிறது.

அப்படி ராப் பாடல்களை எழுதி, பாடி யூடியூபில் பதிவிட்டு இந்திய அளவில் பெரிய ரசிகர் கூட்டத்தை உருவாக்கி வைத்திருப்பவர் தான் வேடன்.

சூப்பர் ஹிட்டடித்த மஞ்சுமெல் பாய்ஸ் படத்தில் குத்தந்திரம் என்ற பாடல் மூலம் ரசிகர்களின் கவனத்தை பெற்றார். தமிழில் சமீபத்தில் வெளியான மாரி செல்வராஜின் பைசன் படத்திலும் பாடியிருந்தார்.

பாப் பாடகராக மக்களின் கவனத்தை பெற்ற வேடன் தனது நீண்டநாள் காதலியான எழுத்தாளர் நவமி லதாவை எளிமையான முறையில் பதிவு திருமணம் செய்துகொண்டார்.

இந்த புதிய ஜோடிக்கு ரசிகர்கள் வாழ்த்து கூறி வருகின்றனர்.

# மோதிரம் அணிவதில் இத்தனை ரகசியம் இருக்கா?

## நட்சத்திர சூட்சமமும் ஆன்மிக அர்த்தமும்

ஒரு சிறுவன் தனது தாத்தாவிடம் கேட்டான்:
“தாத்தா… ஏன் எல்லாரும் விரலில் மோதிரம் அணிவாங்க?”

தாத்தா சிரித்தார்.
“அது அலங்காரம் மட்டும் இல்லப்பா… அதுக்கு பின்னாடி ஒரு பெரிய ரகசியம் இருக்கு!” என்றார்.
அந்த ரகசியமே இந்த பதிவு…

**விரல்கள் நட்சத்திரங்களுடன் இணைந்தவை**

நமது பாரம்பரியத்தில் 27 நட்சத்திரங்கள் உள்ளன.
அவற்றில் நமது கை, கால் விரல்களை குறிக்கும் நட்சத்திரம் திருவோணம் (ஸ்ரவணம்) என்று ஜோதிட மரபில் கூறப்படுகிறது.

**ஏன் திருவோணம்?**

“திருவோணம்” என்பது “முழக்கோல்” என்ற அளவீட்டுடன் தொடர்புடையது.

**ஒரு முழம் = இரண்டு சாண்**

**“சாண்” என்பது பெருவிரல் நுனி முதல் சுட்டுவிரல் நுனி வரை உள்ள நீளம்**

அதாவது —
அளவீட்டின் அடிப்படை itself விரல்கள்தான்!

இதனால், விரல்கள் என்பது சாமான்ய உடல் பகுதி அல்ல.
அவை பிரபஞ்ச ஒழுங்குடன் இணைந்த அளவீட்டு குறியீடுகள்.

**108 எண்ணும் விரல் ரகசியம்**

மந்திர ஜபம் செய்யும்போது 108 முறை எண்ணிக்கையை எப்படி கணக்கிடுகிறோம்?
**விரல் கோடுகளின் துணையால்!**
மாலையில்லாத நேரங்களில் கூட, விரல்கள் தான் ஜப எண்ணிக்கையை சாட்சியமாகக் கணக்கிடுகின்றன.
இதனால்:
விரல்கள் = ஆன்மிக கணக்கீட்டின் கருவி

**மோதிரம் குறிக்கும் நட்சத்திரம் ஆயில்யம்**

விரல்கள் திருவோணம் எனில்,
அவற்றில் அணியும் மோதிரம் குறிக்கும் நட்சத்திரம் — ஆயில்யம் (ஆஸ்லேஷா) என்று கூறப்படுகிறது.

**ஆயில்ய நட்சத்திரத்தின் அதிதேவதை**

**ஆதிசேஷன்**
**திருவோண நட்சத்திரத்தின் அதிதேவதை**
**மகாவிஷ்ணு**
**ஆதிசேஷன்**
**திருமாலின் ஆசனம்**

திருமால் எங்கு இருக்கிறாரோ, அங்கே ஆதிசேஷனும் இருப்பான்.

ஏனெனில்:
ஆதிசேஷன் தான் திருமாலின் படுக்கை
ஆதிசேஷன் தான் உலகைத் தாங்கும் சக்தி
காலச் சக்கரத்தில் பிரபஞ்சத்தைச் சுமப்பவன்
ஆகவே,





திருவோணம் (விரல்) மீது ஆயில்யம் (நாகம்) அமரும்போது —
அது பிரபஞ்ச ஒழுங்குடன் இணையும் குறியீடாகிறது.

இதுவே மோதிரம் அணிவதின் சூட்சும அர்த்தம்.

**தர்பை அணியும் அந்தணர்கள் மறைந்த ரகசியம்**

ஆலய விசேஷங்கள், பிதுர் தர்ப்பணம் போன்ற சமயங்களில்:
அந்தணர்கள் தங்கள் விரலில் நாக வடிவில் தர்பை புல்லை சுற்றி அணிவார்கள்.
அது வெறும் சடங்கு அல்ல.

**விரல் (திருவோணம்) நாகம் (ஆயில்யம் / ஆதிசேஷன்)**

இந்த இணைப்பின் மூலம் சடங்கு பிரபஞ்ச சக்தியுடன் ஒத்திசைவடைகிறது.

**மோதிரத்தின் உலோக ரகசியம்**

மோதிரம் எந்த உலோகத்தில் அணிகிறோம் என்பதற்கும் ஒரு அடையாளம் உண்டு.

**தங்க மோதிரம்**

செழிப்பு
வளர்ச்சி
சூரிய சக்தி
அதிகாரம்

**வெள்ளி மோதிரம்**

மன அமைதி
சந்திர சக்தி
உணர்ச்சி சமநிலை
நேர்மறை ஆற்றல்

**செம்பு மோதிரம்**

மங்களம்
உடல் ஆரோக்கியம்
இரத்த ஓட்ட ஒழுங்கு (பாரம்பரிய நம்பிக்கை)

**ராசிக்கல் மோதிரங்கள்**

பலர் ஜோதிட ஆலோசனையின் பேரில்:
நவரத்தினம்
நீலம்
மரகதம்
வைரம்
புஷ்பராகம்

போன்ற ராசிக்கற்களை அணிகின்றனர்.
இவை அனைத்தும்:

**கிரக சக்தியை சமநிலைப்படுத்த**
**நன்மை பெற**
**மன வலிமை பெற**
என்று நம்பப்படுகிறது.

**ஆன்மிக பார்வையில் மோதிரம்**

மோதிரம் என்பது:
அலங்காரம் மட்டும் அல்ல
அதிகாரத்தின் குறியீடு மட்டும் அல்ல
திருமணத்தின் அடையாளம் மட்டும் அல்ல
அது:
விரல் வழியாக பிரபஞ்ச சக்தியை நினைவூட்டும் வட்ட வடிவச் சின்னம்.
வட்டம் = முடிவில்லாத சுழற்சி
பிரபஞ்சம் = முடிவில்லாத இயக்கம்
அந்த இயக்கத்தோடு நம் விதி ஒத்திசைவதற்கான நினைவுச் சின்னம் — மோதிரம்.


-எம்.அசோக்ராஜா
அரவக்குறிச்சிப்பட்டி
திருச்சி _620015

# தினம் ஒரு தலைவர்கள்

# அம்புஜத்தம்மாள் வரலாறு

அம்புஜத்தம்மாள் சனவரி 9, 1899–1983) என்பவர் இந்திய விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொண்ட தமிழ்நாட்டுப் பெண் ஆவார். இவரது தந்தை எஸ். ஸ்ரீனிவாச ஐயங்கார் மற்றும் தாய்வழி பாட்டனார் வி. பாஷ்யம் ஐய்யங்கார் ஆகியோர் புகழ்பெற்ற வழக்கறிஞர்கள் ஆவார்.





இளமைப்பருவம்
அம்புஜத்தம்மாள் 1899 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் எட்டாம் நாள் வசதியான குடும்பத்தில் பிறந்தார். வீட்டிலேயே கல்வி பயின்றார். தமிழ், ஆங்கிலம் ,இந்தி, சமஸ்கிருதம் எனப் பல மொழிகளையும் கற்றார்.

வாழ்க்கை
அன்னை கஸ்தூரிபாயின் எளிமையான வாழ்க்கையால் ஈர்க்கப்பட்டு இவரும் எளிமையாக வாழ்ந்தார். பிற்போக்கு சிந்தனைகளுடைய குடும்பச் சூழலிலிருந்து தம்மை விடுவித்துக்கொண்டு நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டார். வை. மு. கோதைநாயகி, ருக்குமணி லட்சுமிபதி ஆகியோருடன் இணைந்து பெண்ணடிமைக்கு எதிராகப் போராடினார். பாரதியாரின் பாடல்களைப் பாடி மக்களிடையே விடுதலையுணர்வைத் தூண்டினார் ஆங்கிலேய அரசுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதமாக அந்நியத் துணிகள் விற்கும் கடைக்கு முன்பாக மறியல் போராட்டம் நிகழ்த்தியதனால் வேலூர்ச் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில், தான் கற்ற மொழிகளைப் பிறருக்குக் கற்றுக் கொடுத்தார். காந்தியடிகளால் தத்தெடுக்கப்பட்ட மகள் என்ற செல்லப் பெயர் பெற்றார். தனது தந்தையின் பெயரோடு காந்தியடிகளின் பெயரையும் இணைத்துச் ”சீனிவாச காந்தி நிலையம்” என்னும் தொண்டு நிறுவனத்தை அமைத்தார். 1964 ஆம் ஆண்டு இவருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது[2].1955 ஆம் ஆண்டு, சென்னை, ஆவடியில் நடைபெற்ற சிறப்புமிக்க காங்கிரஸ் மாநாட்டின் செயலாளராக இருந்து அம்புஜம் அம்மையார் அரும்பாடுபட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

வகித்தப் பதவிகள்
மாநிலத் துணை தலைவர் - தமிழ்நாடு காங்கிரஸ் குழு [1957 - 1962] மாநில சமூக நல வாரியம் (சேர்மன்) [1957 - 1964]
நூல் நான் கண்ட பாரதம் என்ற நூலை எழுதியுள்ளார்.

PRGI No. TNBIL/25/A1569
வைகறையில் பேப்பர்பாய்
சென்னை வெள்ளிக்கிழமை 27.02.2026

# நமோ பாரத், மீரட் மெட்ரோ பயணிகள் இலவச பயணத்திற்கு விசுவாசப் புள்ளிகளைப் பெறலாம்!

**புதுடெல்லி, பிப்.27:**

தேசியத் தலைநகர் பிராந்திய போக்குவரத்துக் கழகம் (என்சிஆர்டிசி) இயக்கும் விசுவாசத் திட்டத்தின் கீழ், பயணிகள் பயணத்திற்காகச் செலவிடும் ஒவ்வொரு ரூபாய்க்கும் ஒரு விசுவாசப் புள்ளியைப் பெறுகிறார்கள். ஒவ்வொரு புள்ளியும் 10 பைசா மதிப்புடையது என்று ஒரு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறைந்தபட்சம் 300 புள்ளிகள் குவிந்தவுடன், பயணிகள் நமோ பாரத் மற்றும் மீரட் மெட்ரோ சேவைகள் இரண்டிலும் இலவசப் பயணங்களுக்கு அவற்றைப் பெறலாம் என்று அது கூறியது.

என்சிஎம்சி அட்டை பயனர்களுக்கு, திரட்டப்பட்ட விசுவாசப் புள்ளிகள் ஒவ்வொரு செயல்பாட்டு நாளின் முடிவிலும் அவர்களின் கணக்கில் வரவு வைக்கப்படும். மேலும், மறுநாள் சரிபார்க்கலாம். உதாரணமாக, பயணத்திற்காக ரூ.100 செலவழிக்கும் பயணி ரூ.10 மதிப்புள்ள 100 புள்ளிகளைப் பெறுகிறார் என்று அது கூறியது.

அறிக்கையின்படி, அடிக்கடி பணத்தை திரும்பப் பெறுவதற்கான தேவையைக் குறைக்க, பயணிகள் ஒரே நேரத்தில் ஐந்து பயணங்களுக்கு புள்ளிகளைப் பெறவும் இந்த அமைப்பு அனுமதிக்கிறது. இந்தப் பணத்தை திரும்பப் பெறுவதற்கான பயணங்கள் ஏழு நாள்களுக்கு செல்லுபடியாகும் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் பயன்படுத்தப்பட வேண்டும். என்சிஎம்சி அட்டைகளைப் பயன்படுத்தும் பயணிகள் டிக்கெட் விற்பனை இயந்திரங்கள் அல்லது டிக்கெட் கவுண்டர்களில் தங்கள் குவிந்த புள்ளிகளைச் சரிபார்க்கலாம். நாடு முழுவதும் உள்ள மெட்ரோ ரயில் நிறுவனம், போக்குவரத்து ஆணையம் அல்லது நிதி நிறுவனத்தால் வழங்கப்படும் எந்த என்சிஎம்சி அட்டையையும் நமோ பாரத் ரயில்களிலும், செயல்பாடுகள் தொடங்கியதிலிருந்து கிடைக்கக்கூடிய ஒரு வசதியான மீரட் மெட்ரோவிலும் பயணம் செய்யப் பயன்படுத்தலாம்.

# NCERT விவகாரம் – மன்னிப்பு கோரியது மத்திய அரசு: நீதித்துறையில் 'ஊழல்' என்ற பிரிவு நீக்கப்பட்டதாக தகவல்

**புதுடெல்லி, பிப்.27:**




தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சில் (என்சிஇஆர்டி), அண்மையில் வெளியிட்ட 8-ம் வகுப்பு சமூக அறிவியல் பாடப் புத்தகத்தில் நீதித்துறை 'ஊழல்' குறித்து தெரிவிக்கப்பட்ட கருத்துக்கு உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு மன்னிப்பு கோரியது.

இந்த வழக்கில் இன்று (பிப்.26) ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, "பாடப் புத்தகத்தில் ஆட்சேபனைக்குரிய கருத்துக்கள் இடம் பெற்றது குறித்த தகவல் வெளியானதும் அதை அரசு தீவிரமாக எடுத்துக்கொண்டு, உடனடியாக செயல்பட்டுள்ளது.

அந்தப் புத்தகத்தில் அந்த அத்தியாயம் இடம்பெறக் காரணமாக இருந்த இரண்டு நபர்களும் இந்த அமைச்சகத்தின் எந்த ஒரு நடவடிக்கையிலும் ஈடுபட மாட்டார்கள். வேறு எந்த அமைச்சகத்திலும்கூட அவர்களுக்கு பங்கு இருக்காது. நீதிமன்றத்துக்கு எதிரான நிலைப்பாட்டை மத்திய அரசு எடுக்கவில்லை" என தெரிவித்தார்.

அப்போது பேசிய தலைமை நீதிபதி சூர்ய காந்த், "இந்த விவகாரத்தில் நாங்கள் ஆழமான விசாரணையை நடத்த விரும்புகிறோம். நீதித்துறையின் தலைவர் என்ற முறையில், இதற்கு காரணமானவர்களை பொறுப்பேற்க வைப்பது எனது கடமை. தலைகள் உருள வேண்டும்(காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்). சில நடவடிக்கைகள் எடுக்கப்படும் வரை இந்த வழக்கை நான் முடிக்க மாட்டேன். இதற்குப் பின்னால் உள்ளவர்கள் யார் என்பதை நாங்கள் அறிய விரும்புகிறோம்" என தெரிவித்தார்.

# அமெரிக்காவின் 126% வரி எதிரொலி! சூரிய சக்தி பங்குகள் 14% சரிவு!

**புதுடெல்லி, பிப்.27:**

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சூரிய மின்கலம் மற்றும் தகடுகளுக்கு அமெரிக்கா 126 சதவிகித வரி விதித்துள்ளது. சூரிய சக்தி மீது அமெரிக்கா வரி விதித்த நிலையில், சூரிய சக்தி பங்குகள் 14 சதவிகிதம் வரையில் சரிவடைந்துள்ளன.

வரிவிதிப்பால், புதன்கிழமை (பிப். 25) காலையில் வாரீ எனர்ஜிஸ் நிறுவனத்தின் பங்குகள் 14.6 சதவிகிதத்துக்கும், பிரீமியர் எனர்ஜிஸ் நிறுவனத்தின் பங்குகள் 12 சதவிகிதத்துக்கும் அதிகமாக சரிந்தன. மேலும், போரோசில் புதுப்பிக்கத்தக்கவை 1.5 சதவிகிதமும், விக்ரம் சோலார் 7 சதவிகிதமும் சரிந்தன. உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்குப் பயனளிக்கும் வகையில் அமெரிக்கா வரி விதித்ததாகக் கூறப்படும் நிலையில், இந்தோனேசியாவுக்கு 86 முதல் 143 சதவிகிதமும், லாவோஸுக்கு 81 சதவிகிதம் வரையிலும் வரி விதிக்கப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டின் முதல்பாதியில் அமெரிக்காவின் சூரிய சக்தி இறக்குமதியில் இந்தியா, இந்தோனேசியா, லாவோஸ் 57 சதவிகிதம் பங்களித்துள்ளன. 2024-ல் இந்தியாவிலிருந்து 792.6 மில்லியன் டாலருக்கு சூரிய சக்தி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இது 2022 ஆம் ஆண்டைவிட 9 மடங்கு அதிகமாகும்.


# மேகாலயாவில் 10,293 பேருக்கு எச்ஐவி நோய்க்கு சிகிச்சை

**ஷில்லாங், பிப்.27:**

மேகாலயா சட்டப்பேரவையில் எச்ஐவி தொடர்பாக உறுப்பினர் ஒருவரின் கேள்விக்கு சுகாதார அமைச்சர் டபிள்யூ. ஷில்லா அளித்த பதில் வருமாறு: இந்தியாவிலேயே மேகாலயாவில் தான் எச்ஐவி பாதிப்பு அதிகம் உள்ளது. மாநிலத்தில் 10,293 பேர் எச்ஐவி தொற்றுக்கான ஆன்டிரெட்ரோ வைரல் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த ஆபத்தான போக்கை சமாளிக்க 5 ஆண்டு திட்டத்துக்கு அரசு ரூ.25 கோடி அனுமதித்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் எச்ஐவி/எய்ட்ஸால் பாதிக்கப்பட்ட 749 பேர் இறந்துள்ளனர். மேகாலயாவில் எச்ஐவி-க்கு 392 ஒருங்கிணைந்த ஆலோசனை மற்றும் சோதனை மையங்கள் உள்ளன. நான்கு மொபைல் மையங்களும் செயல்பாட்டில் உள்ளன. எச்ஐவி தொடர்பான விழிப்புணர்வு பிரச்சாரங்களை சுகாதாரத் துறை தீவிரப்படுத்தி வருகிறது. இவ்வாறு அமைச்சர் கூறினார்.

# அனில் அம்பானியின் ரூ.3,716 கோடி பங்களா முடக்கம்! அமலாக்கத்துறை நடவடிக்கை!

**புதுடெல்லி, பிப்.27:**




அமலாக்கத் துறை அதிகாரிகள் கூறியதாவது: வங்கிகளில் பல ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புக்கு அனில் அம்பானியின் ரிலையன்ஸ் கம்யூனிகேஷன்ஸ் நிறுவனம் மோசடி செய்தது குறித்து அமலாக்கத் துறை பண முறைகேடு தடுப்புச் சட்டத்தின்கீழ் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகிறது. இந்த விசாரணையின் ஒரு பகுதியாக, மும்பையில் பாலி ஹில் பகுதியில் இருக்கும் அனில் அம்பானியின் பிரமாண்ட பங்களாவை அமலாக்கத் துறை முடக்கியுள்ளது. அந்த பங்களா 66 மீட்டர் உயரமுடையது. மொத்தம் 17 தளங்கள் அதில் உள்ளன. அதற்கு அபோட் என்று பெயரிடப்பட்டுள்ளது. அதன் மதிப்பு ரூ.3,716. 83 கோடி ஆகும். இதையும் சேர்த்து, அனில் அம்பானிக்கு எதிரான வழக்கில் இதுவரை ரூ.15,700 கோடி மதிப்பிலான சொத்துகளை அமலாக்கத் துறை முடக்கியுள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

பண முறைகேடு தடுப்புச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்கு தொடர்பான விசாரணைக்காக கடந்த 2025-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல்முறை அமலாக்கத் துறை அலுவலகத்தில் அனில் அம்பானி ஆஜராகி வாக்கு மூலம் அளித்தார். விரைவில் அவரிடம் 2-ஆவது முறையாக அமலாக்கத்துறைவிசாரணை நடத்த இருப்பதாகவும் கூறப்படுகிறது.

# குடும்பத்துடன் ஆன்மிக பயணம்: உள்ளாடைகள் வாங்கி வைக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்ட பி.எஸ்.என்.எல். இயக்குநர்

**புதுடெல்லி, பிப்.27:**





பொதுத்துறை தொலைதொடர்பு நிறுவனமான பி.எஸ்.என்.எல்.-ன் இயக்குநராக விவேக் பன்சால் பணியாற்றி வருகிறார். இவர், உத்தரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் உள்ள கங்கை திரிவேணி சங்கமத்தில் குடும்பத்துடன் நீராட திட்டமிட்டார்.

இதற்காக, 2 நாள் பயணமாக நேற்றும், இன்றும் அங்கு செல்ல அவர் திட்டமிட்டு இருந்தார். அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக துறை ரீதியான சுற்றறிக்கை அனுப்பப்பட்டது.

பொதுவாக, ஒரு இடத்திற்கு உயரதிகாரி ஒருவர் செல்கிறார் என்றால், அங்கு தங்குவதற்கான ஏற்பாடுகளை துறை சார்ந்த அதிகாரிகள் செய்து கொடுப்பது வழக்கம். ஆனால், அதையும் தாண்டி இவர், கங்கையில் குளித்த பின் உடலை துடைக்க டவல், சோப்பு, சீப்பு, கண்ணாடி, உள்ளாடைகள் ஆகியவற்றை வாங்கி வைக்க உத்தரவிட்டு இருந்தார். அதுவும் உள்ளாடைகள், ஆண்களுக்கு 6 செட்டும், பெண்களுக்கு 2 செட்டும் வாங்கி, படித்துறையில் தயாராக வைக்க அறிவுறுத்தி இருந்தார்.

இந்த ஏற்பாடுகளை செய்வதற்காக பி.எஸ்.என்.எல். நிறுவனத்தின் 50 ஊழியர்கள் நியமிக்கப்பட்டனர். இதுதவிர அவர் தங்கும் ஹோட்டல் அறையில் உலர் பழங்கள், பழங்கள், முகச்சவரம் செய்வதற்கான ஷேவிங் கிட்டுகள், டவல், டூத் பேஸ்ட், பிரஷ், சோப்பு, ஷாம்பு, சீப்பு, தலைக்கு தேய்க்க தேங்காய் எண்ணெய் என அனைத்தும் தயாராக இருக்க வேண்டும் என்றும் அந்த உத்தரவின் கூறப்பட்டு இருந்தது.

துறை ரீதியாக அனுப்பிவைக்கப்பட்ட இந்த சுற்றறிக்கை சமூக வலைதளங்களில் வெளியாகி வைரலானதுடன்சர்ச்சையையும் ஏற்படுத்தியது. நஷ்டத்தில் இயங்கும் ஒரு பொதுத்துறை நிறுவனத்தின் இயக்குநருக்கு இத்தனை ஆடம்பரம் தேவையா? என்று விவாதங்களும் எழுந்தன.

தனது உத்தரவால் பெரும் சர்ச்சை எழுந்ததை தொடர்ந்து, பிரயாக்ராஜ் ஆன்மிக பயணத்தை விவேக் பன்சால் ரத்து செய்தார்.

அதே நேரத்தில், இந்த விவகாரம் மத்திய அரசின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டது. தற்போது விவேக் பன்சாலிடம் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

# இலவச அறிவிப்புகளுக்கு தடை: விரைந்து விசாரிக்க உச்ச நீதிமன்றம் மறுப்பு

**புதுடெல்லி, பிப்.27:**

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு இலவச அறிவிப்புகளை தடை செய்யக் கோரும் மனுவை விரைந்து விசாரிக்க உச்ச நீதிமன்றம் மறுத்துவிட்டது.

உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் தாக்கல் செய்யப்பட்ட பொதுநல மனுவில் இலவச அறிவிப்புகளை தடை செய்யக் கோரும் மனுவை தலைமை நீதிபதி சூர்யகாந்த், நீதிபதி ஜோய்மால்யா பக்சி அடங்கிய அமர்வு விசாரித்தது. மனுதாரரர் சார்பில் இந்த மனுவை விசாரித்து உரிய உத்தரவு பிறப்பிக்க கோரப்பட்டது. அப்போது தலைமை நீதிபதி, "தேர்தல் காலங்களில் இதுபோன்ற ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்படுவது நிறுத்தப்பட வேண்டும். தமிழகம் மற்றும் கேரள தேர்தலை முன்னிட்டு இதுபோன்ற ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை விரைந்து விசாரிக்க வேண்டிய அவசியம் இல்லை. உரிய நேரத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்" என்றார்.

# ஜம்மு - காஷ்மீரில் பயங்கரவாதிகளின் பதுங்குமிடம் கண்டுபிடிப்பு! வெடிகுண்டுகள், துப்பாக்கிகள் சிக்கின!

**ஜம்மு, பிப்.27:**

ஜம்மு-காஷ்மீரின் பூஞ்ச் மாவட்டத்தில் உள்ள எல்லையோர கிராமத்தில் பயங்கரவாதிகளின் பதுங்குமிடத்தை ராணுவத்தினர் புதன்கிழமை கண்டறிந்தனர். அங்கு இருந்த இரு வெடிகுண்டுகள், துப்பாக்கிகள் உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டன.

இது தொடர்பாக, ஜம்மு-காஷ்மீரை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் ராணுவத்தின் படைப் பிரிவான ஒயிட் நைட் கார்ப்ஸ் வெளியிட்ட எக்ஸ் பதிவில் கூறப்பட்டுள்ளதாவது:

மெந்தார் செக்டாரில் கானி வனப் பகுதியையொட்டிய சலானி காஸ்பலாரி கிராமத்தில் பயங்கரவாதிகளின் பதுங்குமிடம் உள்ளதாக உளவுத் தகவல்கள் கிடைக்கப் பெற்றன. அதனடிப்படையில், ராணுவம் மற்றும் காவல் துறையின் சிறப்பு நடவடிக்கைக் குழுவினா இணைந்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனா.

இந்த நடவடிக்கையில், பயங்கரவாதிகளின் பதுங்குமிடம் கண்டறியப்பட்டது. அங்கிருந்து 4.5 கிலோ எடையுள்ள சக்திவாய்ந்த வெடிகுண்டு, 800 கிராம் எடையுள்ள சிறிய ரக வெடிகுண்டு, இரு சீன தயாரிப்பு கையெறி குண்டுகள், துப்பாக்கிகள், தோட்டாக்கள் உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு வெடிகுண்டுகள் மற்றும் கையெறி குண்டுகள் வெடிக்கச் செய்யப்பட்டு அழிக்கப்பட்டன. இந்த நடவடிக்கையால், பூஞ்ச் மாவட்டத்தில் பயங்கரவாதிகளின் தாக்குதல் சதித் திட்டம் முறியடிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனா.

# மணமேடையில் மணப்பெண்ணை துப்பாக்கியால் சுட்ட இளைஞரால் பரபரப்பு!

**பாட்னா, பிப்.27:**

பிகார் மாநிலத்தில் திருமண மேடையில் வைத்து மணப்பெண் துப்பாக்கியால் சுடப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து காவல் துறையினா கூறியதாவது: பக்சா மாவட்டம், சௌசா பகுதியில் 18 வயதான ஆா்த்தி குமாரிக்கும், இளைஞா ஒருவருக்கும் திருமணத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. செவ்வாய்க்கிழமை இரவு திருமண மேடையில் ஆா்த்தி குமாரியும், திருமணத்துக்கு நிச்சயிக்கப்பட்டு இருந்த இளைஞரும் நின்று கொண்டு இருந்தனா. திருமணத்துக்கு முந்தைய சடங்குகள் மணமகளுக்கு நடைபெற்றன.

அப்போது அங்கு வந்த இளைஞா ஒருவா துப்பாக்கியால் ஆா்த்தியின் வயிற்றில் சுட்டாா. பின்னா அங்கிருந்து தப்பியோடிவிட்டாா. துப்பாக்கிச்சூட்டில் பலத்த காயமடைந்த அவா, பக்சாரில் உள்ள மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு செல்லப்பட்டாா. பிறகு மேல் சிகிச்சைக்காக வாரணாசிக்கு அழைத்துச் செல்லப்பட்டாா.

ஆா்த்தியை துப்பாக்கியால் சுட்டது அவரது அண்டை வீட்டைச் சோ்ந்த தீன்பந்து என்பதும், ஒருதலையாக ஆா்த்தியை அவா காதலித்ததும் முதல்கட்ட விசாரணையில் தெரியவந்தது. இதையடுத்து, தீன்பந்துவை காவல் துறையினா தேடி வருகின்றனா என்று தெரிவித்தனா.

# 60 லட்சம் லிட்டர் கலப்பட நெய்யில் 20 கோடி லட்டு: ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு குற்றச்சாட்டு

**அமராவதி, பிப்.27:**

திருப்பதி தேவஸ்தானத்தில் கடந்த ஆட்சியில் 60 லட்சம் லிட்டர் நெய்யில் கலப்படம் செய்து 20 கோடி லட்டு பிரசாதங்களை விநியோகம் செய்ததாக ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு குற்றம்சாட்டினார்.

ஆந்திர பேரவையில் பட்ஜெட் கூட்டத்தொடர் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று காலை திருப்பதி ஏழுமலையான் கோயிலில் கடந்த ஜெகன் மோகன் ரெட்டியின் ஆட்சியின் போது நெய்யில் கலப்படம் என்று தெரிந்தே வாங்கியதாக தீவிர குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டன. இதன் மீது சுமார் 3 மணி நேரம் விவாதம் நடைபெற்றது.

இதில் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு பேசியதாவது: கலப்பட நெய் விவகாரத்தில் உச்ச நீதிமன்ற உத்தரவின் பேரில் சிறப்புப் புலனாய்வுக் குழு விசாரணையை நடத்தியது. அக்குழுவினர் விசாரணை நடத்தி, அதிகாரிகள், ஊழியர்கள், நிபுணர்கள் என அனைவரும் சேர்ந்தே இந்த தவறை செய்தனர். ஆதலால் அவர்கள் மீது ஆந்திர அரசு தரப்பில் நடவடிக்கை எடுக்கலாம் என எனக்கு பரிந்துரை செய்தது. இதனை விசாரிக்கவே ஒரு நபர் விசாரணை கமிஷன் தற்போது அமைக்கப்பட்டுள்ளது. முந்தைய ஆட்சியினர் லட்டு விவகாரத்தில் மட்டுமல்லாது பல விஷயங்களில் தவறிழைத்துள்ளனர். 2019- 24ம் ஆண்டு இடையே மட்டும் முந்தைய அரசு 59.71 லட்சம் லிட்டர் கலப்பட நெய்யை வாங்கி உபயோகித்துள்ளது. இதில் ரூ.231.51 கோடி ஊழல் நடந்துள்ளது. திண்டுக்கல் ஏஆர் டயரி ஃபுட்ஸ், திருப்பதி ஸ்ரீவைஷ்ணவி டயரி, நெல்லூர் மால் கங்கா மில்க் டயரி ஆகியவற்றின் பெயர்களில் நெய் விநியோகம் செய்யப்பட்டது. இதில் லஞ்சம் வாங்கிய முன்னாள் அறங்காவலர் குழு தலைவர் ஒய்.வி. சுப்பாரெட்டியின் உதவியாளர் சின்னப்பா கைது செய்யப்பட்டுள்ளார். இவ்வாறு முதல்வர் சந்திரபாபு நாயுடு பேசினார்.

துணை முதல்வர் பவன் கல்யாண் பேசியதாவது: கலப்பட நெய்யில் எந்த ரசாயனத்தை கலந்தார்களோ அது பெருமாளுக்கே வெளிச்சம். நெய்யில் விலங்கு கொழுப்பு கலந்திருந்தது என்பது என்டிடிபி கொடுத்த அறிக்கையில் இருந்தது. அது நெய்யே இல்லை என சிபிஐ அறிக்கை கொடுத்துள்ளது. அப்போதைய அறங்காவலர் குழு மீது குற்றம் சுமத்தினால் முன்னாள் முதல்வர் ஜெகன் ஏன் மல்லு கட்டுகிறார் ? அப்படியெனில் அதில் அவருக்கும் பங்கு இருக்கிறது என்பது உண்மை தானே ? கலப்பட நெய் விவகாரத்தில் தவறு செய்தவர்கள் யாராக இருப்பினும் தண்டிக்கப்பட வேண்டியவர்களே. இவ்வாறு பவன் கல்யாண் பேசினார்.

# தகுதிவாய்ந்த தலைவர்களைத் தேர்வு செய்ய 'நோட்டா' வழிவகுத்துள்ளதா? உச்சநீதிமன்றம் கேள்வி!

**புதுடெல்லி பிப்.27:**

தேர்தல்கள் மூலம் தகுதிவாய்ந்த தலைவர்கள் தேர்வு செய்யப்படுவதற்கு நோட்டா (யாருக்கும் வாக்களிக்க விருப்பமில்லை) வழிவகுத்துள்ளதா என்று உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பியது.

மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951-இன் 53(2) பிரிவின்படி, தேர்தல் நடைபெறும் இடங்களின் எண்ணிக்கையும், அவற்றில் போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கையும் சமமாக இருந்தால் (எடுத்துக்காட்டாக ஓரிடத்தில் ஒருவர் மட்டுமே போட்டியிடுவது), அவர்கள் போட்டியின்றித் தேர்வு செய்யப்படுவதாக தேர்தல் நடத்தும் அலுவலர் அறிவிப்பார்.


இந்தப் பிரிவுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் சட்ட அமைப்பு ஒன்று தாக்கல் செய்துள்ள மனுவில், ஓரிடத்தில் ஒரேயொரு வேட்பாளர் மட்டும் போட்டியிட்டால், அவருக்கு எதிராக நோட்டாவுக்கு வாக்களிப்பதை 53(2) பிரிவு தடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு தலைமை நீதிபதி சூர்ய காந்த், நீதிபதி ஜயமால்ய பாக்சி ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பாக செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது தேர்தல்கள் மூலம் தகுதிவாய்ந்த தலைவர்கள் தேர்வு செய்யப்படுவதற்கு நோட்டா வழிவகுத்துள்ளதா என்று நீதிபதி ஜயமால்ய பாக்சி கேள்வி எழுப்பினார்.

நோட்டாவுக்கு அதிகபட்ச வாக்குகள் கிடைத்தாலும், அதனால் ஒரு தொகுதியில் வெற்றியாளரைத் தீர்மானிக்க முடியாது என்று கூறிய அவர், நோட்டாவை ஒரு நபராகக் கருத முடியாது என்றும் தெரிவித்தார்.

வாக்களிப்பதைக் கட்டாயமாக்க...: நீதிபதிகள் அமர்வு மேலும் கூறுகையில், 'தேர்தல்களில் படிக்காதவர்கள், பெண்கள் வாக்களிப்பதைவிட படித்தவர்களும், பணக்காரர்களும் வாக்களிப்பது மிகக் குறைவாகவே உள்ளது. நல்ல வேட்பாளர்கள் வெற்றி பெறுவதை உறுதி செய்யும் வகையில், வாக்களிப்பதைக் கட்டயாமாக்க கடுமையாக முயற்சிக்க வேண்டும்' என்று தெரிவித்தனர். இந்த மனு மீதான அடுத்த விசாரணை மார்ச் 17-ஆம் தேதி நடைபெற உள்ளது.

# மகாராஷ்டிரத்தில் 2025-ல் மட்டும் 41 புலிகள் உயிரிழப்பு!



மகாராஷ்டிர சட்டப்பேரவையில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளித்த அம்மாநில வனத்துறை அமைச்சர் கணேஷ் நாயக், வேட்டை, விபத்து உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் 41 புலிகள் உயிரிழந்ததாகக் கூறியுள்ளார்.

இந்த நிலையில், கடந்த 2025 ஆம் ஆண்டில் 28 புலிகள் இயற்கையான காரணங்களாலும், 8 புலிகள் விபத்துகளிலும், 4 புலிகள் மின்சாரம் பாய்ந்தும், 1 புலி மட்டும் வேட்டையிலும் உயிரிழந்துள்ளன.

இதனைத் தொடர்ந்து, வனவிலங்குகள் வேட்டையாடப்படுவதைத் தடுக்க சிறப்புப் பாதுகாப்புப் படையினர் தொடர்ந்து ரோந்து பணிகளை மேற்கொண்டு வருவதாகவும், விலங்குகளின் நடமாட்டம் உள்ள பகுதிகளில் கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளதாகவும் மகாராஷ்டிர அரசின் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

இத்துடன், வனவிலங்குகள் பாதிப்படைவதைக் குறைப்பதற்காக வனப் பகுதி வழியாகச் செல்லும் ரயில்கள் 40 கி.மீ. வேகத்தை கடைப்பிடிக்க வேண்டுமென ரயில்வேதுறைக்கு அறிவுறுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## சென்னை | திருமணத்தை மீறிய உறவில் இருந்த பெண்ணை கொலை செய்த உறவினர் கைது

**சென்னை, பிப்.27:** திருமணத்தை மீறிய உறவில் இருந்த பெண் அடித்து கொலை செய்யப்பட்ட விவகாரத்தில் உறவினர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சென்னை வளசரவாக்கம் அடுத்த ராமாபுரம், செந்தமிழ் நகர் அனெக்ஸ் 2-வது தெருவில் வசித்து வந்தவர் புஷ்பா (37). கணவருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக கடந்த 10 ஆண்டுகளாக அவரை பிரிந்து தனது மகள் மற்றும் உறவினர்களுடன் வசித்து வந்தார்.

நேற்று காலை இவரது மகள் வீட்டின் மொட்டை மாடிக்குச் சென்று பார்த்தபோது, தாய் புஷ்பா முகம், கைகளில் காயங்களுடன் மயங்கிக் கிடந்தார். அதிர்ச்சி அடைந்த அவர், உடனடியாக இதுகுறித்து குடும்பத்தினரிடம் தெரிவித்தார்.

108 ஆம்புலன்ஸ் மருத்துவப் பணியாளர்கள் வந்து பார்த்தபோது புஷ்பா இறந்திருந்தது தெரிந்தது. தகவலறிந்த ராமாபுரம் போலீஸார் சம்பவ இடம் விரைந்து புஷ்பா உடலை மீட்டு பிரேதப்பரிசோதனைக்காக கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

போலீஸாரின் முதல் கட்ட விசாரணையில் புஷ்பா அடித்து கொலை செய்யப்பட்டது தெரிந்தது. இதையடுத்து, கொலை வழக்காக பதிவு செய்து உறவினரான கார்த்திக்கை கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

கொலை நடந்தது எப்படி?

கொலை செய்யப்பட்ட புஷ்பாவுக்கும், உறவினரான மதுரவாயல் ஸ்ரீதேவிகுப்பத்தைச் சேர்ந்த டெய்லரான கார்த்திக் (34) என்பவருக்கும் திருமணத்தை மீறிய உறவு இருந்துள்ளது. இதையடுத்து புஷ்பா வீட்டுக்கு கார்த்திக் அடிக்கடி வந்து சென்றுள்ளார்.

அதன்படி சம்பவத்தன்று இரவும் கார்த்திக் வந்துள்ளார். இருவரும் மொட்டை மாடியில் தனிமையில் இருந்ததாகக் கூறப்படுகிறது.

அப்போது அவர்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டு தகராறாக மாறியுள்ளது. ஆத்திரம் அடைந்த கார்த்திக், புஷ்பாவை தாக்கிவிட்டு சென்றுள்ளார். இதில் புஷ்பா இறந்துள்ளதாக போலீஸார் தெரிவித்தனர்.

## பெரியபாளையம் அருகே ரவுடியை கொலை செய்த 4 பேர் கைது

**ஊத்துக்கோட்டை, பிப்.27:** பெரியபாளையம் அருகே ரவுடியை கொலை செய்த 4 பேர் கைது செய்யப்பட்டனர்.

திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையம் அருகே உள்ள அரியப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்தவர் கோகுல் (26). ரவுடியான இவர் மீது கொலை வழக்கு, அடிதடி உள்ளிட்ட பல வழக்குகள் நிலுவையில் உள்ளன.


இந்நிலையில், கட்டுமான பணியில் ஈடுபட்டு வந்த கோகுல், தன் தாயுடன் வசித்து வந்தார். இந்நிலையில், நேற்று முன் தினம் மாலை வீட்டை விட்டு வெளியே சென்ற கோகுல் இரவு வீடு திரும்பவில்லை.

இந்நிலையில், நேற்று காலை பெரியபாளையம் அருகே தண்டுமா நகர் பகுதியில் காலி இடத்தில் கோகுல், கும்பல் ஒன்றால் தலை, முகம், கழுத்து, வயிறு உள்ளிட்ட பகுதிகளில் அரிவாளால் வெட்டி கொலை செய்யப்பட்டு கிடந்தார்.

இதுதொடர்பாக வழக்குப் பதிவு செய்து பெரியபாளையம் போலீஸார் விசாரணை நடத்தினர். அதன் அடிப்படையில், நேற்று பகலில் தண்டுமா நகர் பகுதியை சேர்ந்த தீனா (22), சிவக்குமார் (21), பேரரசு (20), தியாகராஜன் (19) ஆகியோரை கைது செய்தனர்.

போலீஸார் தீவிர விசாரணை பெரியபாளையம் போலீஸார் நடத்திய முதல்கட்ட விசாரணையில், மதுபோதையில் ஏற்பட்ட தகராறில் கோகுல் கொலை செய்யப்பட்டது தெரிய வந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

## கோவளம் | விடுதி மாணவிகளுக்கு பாலியல் துன்புறுத்தல்: சமையலரிடம் போலீஸார் விசாரணை



**கோவளம், பிப்.27:** கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள கோவளம் அரசு உதவி பெறும் தனியார் மேல்நிலைப் பள்ளியில் முதியோர் காப்பகம், குழந்தைகள் காப்பகம், மாணவியர் விடுதி போன்றவை செயல்பட்டு வருகின்றன.

இங்குள்ள விடுதியில் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த மாணவி சேர்க்கப்பட்டிருந்தார். அவரும் விடுதியில் இருந்த 20-க்கும் மேற்பட்ட மாணவிகளும் அதே பள்ளியில் 7-ம் வகுப்பு படித்து வந்தனர்.

மாணவியின் தந்தை பிரிந்து சென்று விட்டதால் மாணவியின் தாயார் மட்டும் மாதம் ஒருமுறை வந்து மகளை பார்த்துச் செல்வது வழக்கம்.

இந்நிலையில் கடந்த 24-ம் தேதி தன்னைப் பார்க்க தாய் வந்தபோது விடுதியில் இருக்கும் சமையலர் தன்னிடமும், சக மாணவிகளிடமும் தவறாக நடந்து கொள்ள முயற்சிப்பதாகவும், பாலியல் சீண்டலில் ஈடுபடுவதாகவும் மாணவி புகார் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மாணவியின் தாயார் பள்ளி நிர்வாகத்திடம் கூறினார். அவர்கள் நடத்திய விசாரணையில் சமையலர் மாணவிகளிடம் தவறாக நடந்தது உறுதி செய்யப்பட்டது.

இதையடுத்து மாணவியின் தாயார் நேற்று காலை கேளம்பாக்கம் போலீஸில் புகார் அளித்தார். கேளம்பாக்கம் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் கோமதி வழக்குப் பதிவு செய்து விடுதி சமையலரான விழுப்புரம் மாவட்டம், காடுவெட்டி பகுதியைச் சேர்ந்த லட்சுமணனை (44) போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தார்.

# ஆதீன மடங்களுக்குரிய சொத்து ஆக்கிரமிப்புகளை அகற்ற அறநிலையத் துறைக்கு ஐகோர்ட் உத்தரவு



**சென்னை, பிப்.27:** 'தமிழகம் முழுவதும் ஆதீன மடங்களுக்குச் சொந்தமான சொத்துகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை 3 மாத காலத்துக்குள் அகற்ற வேண்டும்' என அறநிலையத் துறை அதிகாரிகளுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சேலத்தைச் சேர்ந்த திருத்தொண்டர் அறக்கட்டளை அறங்காவலரான ஏ.ராதாகிருஷ்ணன், உயர் நீதிமன்ற மதுரை கிளையில் கடந்த 2018-ம் ஆண்டு தாக்கல் செய்திருந்த மனுவில், ''தூத்துக்குடி மாவட்டம் நெடுங்குன்றத்தில் உள்ள செங்கோல் ஆதீன மடத்துக்குச் சொந்தமான ஏராளமான சொத்துகள் தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ளன.

இந்த சொத்துகள் ஆக்கிரமிப்பின் பிடியில் உள்ளதால், அவற்றை மீட்க அறநிலையத் துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும்'' எனக் கோரியிருந்தார்.

**சொத்துகளின் தற்போதைய நிலை...**

இந்த வழக்கை ஏற்கெனவே விசாரித்த உயர் நீதிமன்ற மதுரை கிளை, இந்த ஆதீன மடம் மட்டுமின்றி தமிழகத்தில் உள்ள அனைத்து ஆதீன மடங்களுக்கும் சொந்தமான சொத்துகளின் தற்போதைய நிலை குறித்த அறிய இந்த வழக்கில் அனைத்து ஆதீன மடங்களையும், அதன் மடாதிபதிகளையும் வழக்கில் சேர்க்க உத்தரவிட்டது.

இந்நிலையில் இந்த வழக்கு சென்னை உயர் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டு நீதிபதிகள் எஸ்.எம்.சுப்ரமணியம், சி.குமரப்பன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணை நடந்தது.

அதைத் தொடர்ந்து, "தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து ஆதீனமடங்களுக்குச் சொந்தமான சொத்துகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை 12 வார காலத்துக்குள் அகற்ற வேண்டும்" என உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்துள்ளனர்.

### மடப்புரம் பத்திரகாளி அம்மன் கோவிலில்

## ஜெயலலிதா பிறந்த நாளை முன்னிட்டு அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி முதல்வராக வேண்டி தங்கத்தேர் இழுத்த முன்னாள் யூனியன் சேர்மன் மாரிமுத்து



**மானாமதுரை, பிப். 27** சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் மடப்புரம் பத்ரகாளி அம்மன் கோவிலில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி முதல்வராக வேண்டி ஜெயலலிதா பிறந்த நாளை முன்னிட்டு தங்கத்தேர் இழுத்து வந்து மடப்புரம் பத்ரகாளிம்மனை பிரார்த்தனை செய்தனர் ,

அதிமுக தொண்டர்கள் திருப்புவனம் மடப்புரம் பத்ரகாளியம்மன் கோவிலில் முதலமைச்சர் ஜெயலலிதாவின் 78 வது பிறந்த தினத்தை முன்னிட்டும் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி 2026முதல்வராக வேண்டி மானாமதுரை முன்னாள் யூனியன் சேர்மனும் முன்னாள் மாவட்ட கவுன்சிலருமான மாரிமுத்து தலைமையில் அதிமுக நிர்வாகிகள் ஏராளமானருடன் தங்கத்தேர் இழுத்து மடப்புரம் பத்திரகாளி அம்மனை வழிபட்டனர், நிகழ்ச்சியில் முன்னாள் எம்எல்ஏக்கள் நாகராஜன், குணசேகரன், மாவட்ட எம்ஜி ஆர் மன்ற செயலாளர் சிவ்தேவ்குமார். ஜெ பேரவை மாவட்ட செயலாளர் இராமு இளங்கோவன், ஒன்றிய செயலாளர்கள் சோனை ரவி, புவனேந்திரன் உட்பட ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# திருப்பரங்குன்றம் கோயிலில் மார்ச் 1-ல் பிரதமர் சுவாமி தரிசனம்: தேசிய பாதுகாப்பு படையினர் ஆய்வு



**மதுரை / சென்னை, பிப்.27:** மதுரையில் மார்ச் 1-ல் நடைபெறும் தேசிய ஜனநாயக கூட்டணியின் தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி பேசுகிறார்.

தொடர்ந்து, மதுரை எய்ம்ஸ் கட்டிடம், புதிய ரயில் நிலையங்கள், புதிய சாலைப் பணிகள் திறப்பு விழாவில் பங்கேற்கிறார்.

இதற்காக மண்டேலா நகரில் அரசியல் விழா, அரசு விழாவுக்கு 2 மேடைகள் அமைக்கும் பணிகள் நடந்து வருகின்றன.

இது தொடர்பாக மதுரை ஆட்சியர் பிரவீன்குமார், காவல் ஆணையர் லோகநாதன், எஸ்.பி. அரவிந்த் ஆகியோர் கொண்ட குழுவினர் ஆய்வு மேற்கொண்டு, அறிக்கை சமர்ப்பித்தனர்.

இதற்கு தேசிய பாதுகாப்புப் படையினர் ஒப்புதல் அளிக்காததால், அரசு விழாவை விமான நிலையம் அருகில் நடத்த முடிவெடுக்கப்பட்டது. இதற்காக தனியாக மேடையும் அமைக்கப்பட்டு வருகிறது. மேலும், பிரதமர் மோடி திருப்பரங்குன்றம் முருகன் கோயிலில் சுவாமி தரிசனம் செய்கிறார்.

இதையொட்டி, பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக திருப்பரங்குன்றம் கோயிலில் தேசிய பாதுகாப்பு படையைச் சேர்ந்த 8 பேர் அடங்கிய குழுவினர் நேற்று ஆய்வு மேற்கொண்டதுடன், காவல் ஆணையர் ஜெ.லோகநாதன், துணை ஆணையர் இனிகோ திவ்யன் ஆகியோருடன் ஆலோசனை நடத்தினர்.

சிவப்பு மண்டலம்...

சென்னை கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் வரும் 28-ம் தேதி இரவு தங்குகிறார். இதையொட்டி, சென்னையில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வரும் 28 மற்றும் மார்ச் 1-ம் தேதியில் பாதுகாப்பு காரணங்களுக்காக மீனம்பாக்கம், கிண்டி பகுதிகள் மற்றும் பிரதமர் வரும் வழித்தடங்கள் சிவப்பு மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ளன. மேலும், ஆளுநர் மாளிகையை சுற்றிலும் ட்ரோன் கேமராக்கள் மற்றும் ஆளில்லா வான் வழி கருவிகள் பறக்கவிட தடை விதிக்கப்பட்டுள்ளது.

# மாற்றுத் திறனாளிகளுக்கு டெட் தேர்ச்சி மதிப்பெண் குறைப்பு: 40 சதவீதமாக நிர்ணயித்து அரசாணை




**சென்னை, பிப்.27:** மாற்றுத் திறனாளிகளுக்கு டெட் தேர்ச்சி மதிப்பெண்ணை 40 சதவீதமாக குறைத்து பள்ளிக் கல்வித் துறை அரசாணை வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பாக துறை செயலர் பா.சந்தரமோகன் நேற்று வெளியிட்ட அரசாணை: கடந்த ஜனவரி மாதம் வெளியிடப்பட்ட அரசாணையின் படி, ஆசிரியர் தகுதி தேர்வில் தேர்ச்சி பெற பொதுப்பிரிவினர் 60 சதவீத மதிப்பெண்ணும் (150-க்கு 90), பிசி, பிசி-முஸ்லிம், டிஎன்சி, மாற்றுத் திறனாளிகள் 50 சதவீதமும் (150-க்கு 75), எஸ்சி, எஸ்சி-அருந்ததியர், எஸ்டி வகுப்பினர் 40 சதவீதமும் (150-க்கு 60) பெற வேண்டும்.

இந்நிலையில், ஆந்திரா, தெலங்கானாவில் இருப்பதைப் போல் மாற்றுத் திறனாளிகளுக்கான டெட் தேர்ச்சி பெண்ணை 40 சதவீதமாக நிர்ணயிக்குமாறு மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர் அரசுக்கு கருத்துரு அனுப்பியிருந்தார். அதனை பரிசீலித்து மதிப்பெண்ணை 40 சதவீதமாக நிர்ணயித்து அரசு ஆணையிடுகிறது.

மேலும் இந்தப் புதிய தேர்ச்சி மதிப்பெண் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடத்தப்பட்ட டெட் தேர்வுக்கும், கடந்த 13-ம் தேதி வெளியிடப்பட்டுள்ள டெட் தேர்வு அறிவிப்புக்கும் பின்பற்ற அனுமதிக்க படுகிறது.

இவ்வாறு கூறியுள்ளது.

இதன்படி மாற்றுத் திறனாளிகள் பிரிவில் புதிதாக தேர்ச்சி பெறுவோர் பட்டியலை (தாள்-1 மற்றும் தாள் -2) ஆசிரியர் தேர்வு வாரியம் விரைவில் வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தொழிலதிபர் மனைவியை மிரட்டி தங்க, வைர நகைகளை பறித்த வழக்கில் தாய், மகன் கைது



**சென்னை, பிப்.27:** அந்தரங்க வீடியோவை வெளியிட்டு விடுவதாக தொழில் அதிபர் மனைவியை மிரட்டி கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள தங்க, வைர நகைகளை பறித்த வழக்கில் தாய், மகன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சென்னை வேப்பேரியில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பு ஒன்றில் 35 வயதுடைய பெண் ஒருவர் தனது தொழில் அதிபர் கணவர் மற்றும் பிள்ளைகளுடன் வசித்து வருகிறார். இதே குடியிருப்பில் கடந்த ஆண்டு சங்கீதா (53) என்பவர் தனது மகன்கள் திலீப் (34), அங்கீத் (31) ஆகியோருடன் வாடகைக்கு குடியேறினார்.

பின்னர் தொழிலதிபர் மனைவி தனியாக இருக்கும் போது அவரது வீட்டுக்கு சங்கீதா அடிக்கடி சென்று பேசிப் பழகினார். இருவரும் நண்பர்களான நிலையில், தொழிலதிபரின் மனைவியும் அடிக்கடி சங்கீதா வீட்டுக்குச் சென்றுள்ளார். அப்போது திலீப்புடன் பழக்கம் ஏற்பட்டு, நெருக்கமாகியுள்ளது.

இருவரும் தகாத உறவில் இருந்ததாக கூறப்படுகிறது. இதைப் பயன்படுத்தி தொழிலுக்கு வருமான வரி செலுத்த வேண்டும், செலவுக்கு பணம் தேவை என பல்வேறு காரணங்களைக் கூறியுள்ளார்.


இதை உண்மையென நம்பி தொழில் அதிபர் மனைவி வீட்டிலிருந்து, கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சுமார் 850 கிராம் தங்க நகைகள், 120 கிராம் வைர நகைகள் மற்றும் இரண்டரை கிலோ வெள்ளிப் பொருட்களை சிறிது சிறிதாக கொடுத்துள்ளார்.

மேலும் திலீப் பணம் கேட்டபோது, 'அப்பெண் மொத்த நகைகளையும் கொடுத்து விட்டேன். தன்னிடம் இல்லை' என கூறியுள்ளார். அப்போது திலீப், 'பணம் தரவில்லை என்றால் நாம் இருவரும் சேர்ந்து எடுத்த புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை இணையதளத்தில் வெளியிட்டு விடுவேன்' என மிரட்டியுள்ளார்.

அதிர்ச்சியடைந்த பெண் இந்த விவகாரம் தொடர்பாக வேப்பேரி காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். அதன்படி போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். இதையறிந்த திலீப் தலைமறைவானார். இந்த மோசடிக்கு உடந்தையாக இருந்ததாக திலீப்பின் தாய் சங்கீதா, சகோதரர் அங்கீத் ஆகிய இருவரையும் போலீஸார் கைது செய்தனர்.

இவர்கள் இதே பாணியில் பல்வேறு இடங்களில் நகை, பணத்தை பறித்தது தெரியவந்ததாக போலீஸார் கூறினர். தலைமறைவாக உள்ள திலீப்பை தனிப்படை அமைத்து போலீஸார் தேடி வருகின்றனர்.

# சென்னையில் சிலிண்டர் வெடித்து விபத்து: நகைப்பட்டறை உரிமையாளர் உயிரிழப்பு



**சென்னை, பிப்.27:** சென்னை சவுகார்பேட்டையில் சாய் வாக்ஸ் என்ற நகைப்பட்டறையில் சிலிண்டர் கேஸ் கசிவு ஏற்பட்டு வெடித்து விபத்துக்குள்ளானது.

இதில், படுகாயமடைந்த நகைப்பட்டறை உரிமையாளர் சுமன் பால் கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார்.

மேலும், நகைப்பட்டறை ஊழியர்கள் அரவிந்த், சூரஜ், ஆனந்த், இந்திரஜித் உள்ளிட்ட 6 பேருக்கு கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.



▶ கீழ் அஹோபிலத்தில் ஹனுமந்த வாகனம்.




▶ நாராயணப் பெருமாள், திருநாங்கூர் மணிமாட கோவில். மணிமாட கோவில் திருநாங்கூர் ஸ்ரீ நாராயண பெருமாள் திவ்ய சேவை.

# உக்கல்அருள்மிகு மடாவளம் காமாட்சி அம்பாள் கோயிலில் யாக வேள்வி பூஜை





**செய்யாறு, பிப்.27:** செய்யாறு அடுத்த உக்கல் அருள்மிகு மடாவளம் ஸ்ரீ காமாட்சி அம்பாள் கோயிலில் நேற்று முன்தினம்சிறப்பு யாக வேள்வி பூஜை நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து கலச புறப்பாடு நடைபெற்றது .பின்னர் மூலவரான ஸ்ரீ காமாட்சி அம்பாளுக்கு சிறப்பு அபிஷேகம், ஆராதனை நடைபெற்றது.

திரளான பக்தர்கள் கலந்து கொண்டு ஸ்வாமி தரிசனம் செய்தனர். முன்னதாக பக்தர்களுக்கு கோயில் நிர்வாகம் சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது.

## பழனி கோவிலில் வழிபாடு

**பழனி, பிப்.27:** அறுபடை வீடுகளில் 3ம் படை வீடான பழனி தண்டாயுதபாணி சுவாமி கோவிலுக்கு தமிழகம் மட்டுமின்றி வெளிமாநிலங்கள், வெளிநாடுகளில் இருந்தும் பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்ய வருகின்றனர். அவ்வாறு வரும் பக்தர்கள் பழனி அடிவாரம் கிரி வீதியில் உள்ள புலிப்பாணி சித்தர் ஆசிரமத்துக்கும் சென்று வழிபாடு நடத்தி வருகின்றனர்.

இங்கு அமாவாசை, பவுர்ணமி போன்ற விசேஷ நாட்களில் சிறப்பு பூஜைகள் நடைபெறும். இந்நிலையில் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட பக்தர்கள் பழனி கோவிலுக்கு வந்தனர். அவர்கள் புலிப்பாணி ஆசிரமத்தில் நடந்த சிறப்பு யாகத்தில் பங்கேற்றனர். 25 ஆண்கள், 25 பெண்கள் என அவர்கள் அனைவரும் தமிழ் பாரம்பரியப்படி வேட்டி சட்டை அணிந்து புலிப்பாணி பாத்திர சுவாமிகள் தலைமையில் நடந்த யாகத்தில் பங்கேற்றனர்.

தொடர்ந்து பால்குடம் எடுத்து கிரிவீதி, சன்னதி வீதிகளில் ஊர்வலமாக சென்றனர். அதன் பின் திருஆவினன்குடி கோவில், குழந்தை வேலாயுத சுவாமிக்கு பாலாபிஷேகம் செய்து வழிபட்டனர்.


அதன் பின் பழனி மாரியம்மன் கோவில் மாசித் திருவிழா தேரோட்டத்தில் கலந்து கொண்டு அக்னி சட்டி ஏந்தி ஓம் சக்தி, பராசக்தி கோஷத்துடன் ஊர்வலமாக சென்று வழிபட்டனர்.



▶ மதுரை ஸ்ரீ கூடலழகர் தெப்ப திருவிழா ஆறாம் திருநாள் - யானை வாகனம்.



▶ திருக்கோஷ்டியூர் ஸ்ரீ சௌமிய நாராயணப் பெருமாள் மாசி கருடன்.



▶ திருக்குடந்தை ஸ்ரீ சக்ரபாணி சுவாமி மாசி மகம் உற்சவம் கருட சேவை புறப்பாடு.

### வார இறுதி நாட்களை முன்னிட்டு

## சென்னையில் இருந்து 785 சிறப்புப் பேருந்துகள் இயக்கம்: போக்குவரத்துத் துறை தகவல்

**சென்னை, பிப்.27:** வார இறுதி நாட்களை முன்னிட்டு சென்னையில் இருந்து 785 சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படும் என போக்குவரத்துத் துறை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அரசு விரைவுப் போக்குவரத்துக்கழக மேலாண் இயக்குநர் மோகன் வெளியிட்ட அறிக்கை: பிப்.27-ம் தேதி, பிப்.28-ம் தேதி மற்றும் மார்ச் 1-ம் தேதி வார விடுமுறை நாட்களை முன்னிட்டு சென்னையிலிருந்து இதர இடங்களுக்கும் மற்றும் பிற இடங்களிலிருந்தும் கூடுதலான பயணிகள் தமிழகம் முழுவதும் பயணம் மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் தினசரி இயக்கப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக சிறப்புப் பேருந்துகளை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர்



ஆகிய இடங்களுக்கு நாளை (பிப்.27) 310 பேருந்துகளும், நாளை மறுநாள் (பிப்.28) 325 பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை கோயம்பேட்டிலிருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஓசூர், பெங்களூரு ஆகிய இடங்களுக்கு நாளை 55 பேருந்துகளும், நாளை மறுநாள் 55 பேருந்துகளும் மேற்கூறிய இடங்களிலிருந்தும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் பெங்களூர், திருப்பூர், ஈரோடு மற்றும் கோவை ஆகிய இடங்களிலிருந்தும் பல்வேறு இடங்களுக்கு 100 சிறப்புப் பேருந்துகள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மாதவரத்திலிருந்து நாளை மற்றும் நாளை மறுநாள் தலா 20 சிறப்புப் பேருந்துகள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் ஞாயிறு அன்று சொந்த ஊரிலிருந்து சென்னை, பெங்களூர் திரும்ப வசதியாக பயணிகளின் தேவைக்கேற்ப அனைத்து இடங்களிலிருந்தும் சிறப்புப் பேருந்துகள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த வார இறுதியில் வெள்ளிக்கிழமை 5,850 பயணிகளும், சனிக்கிழமை 2,607 பயணிகளும் மற்றும் ஞாயிறு அன்று 5,944 பயணிகளும் பயணம் மேற்கொள்ள முன்பதிவு செய்துள்ளனர். இச்சிறப்பு பேருந்து இயக்கத்தை கண்காணிக்க அனைத்து பேருந்து நிலையங்களிலும் போதிய அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# அரசியல் கார்னர்

## 28-ந்தேதிக்குள் கூட்டணி குறித்து அறிவிக்கப்படும்- ராமதாஸ்

**திண்டிவனம், பிப்.27:** பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் அவரது மகன் அன்புமணி ஆகியோர் இரு அணிகளாக செயல்பட்டு வருகின்றனர்.

இதில் அன்புமணி தலைமையிலான பா.ம.க., அ.தி.மு.க.வுடன் கூட்டணி பேச்சுவார்த்தை முடிவடைந்த நிலையில் தொடர்ந்து தேர்தல் பணிகளை செய்து வருகிறார்கள். டாக்டர் ராமதாஸ் எந்த கூட்டணியில் சேருவோம் என அறிவிக்காமல் மவுனம் காத்து வருகிறார். கடந்த சில தினங்களாக பா.ஜ.க. மற்றும் தமிழக வெற்றி கழக நிர்வாகிகள் டாக்டர் ராமதாசிடம் பேசி வருவதாக தகவல் வெளியானது.

இந்த நிலையில் டாக்டர் ராமதாஸ் திடீரென கடந்த சில தினங்களுக்கு முன்பாக நிர்வாக குழு கூட்டத்தை நடத்தி கூட்டணி சம்பந்தமாக கருத்து கேட்டார். அதில் பெரும்பாலான உறுப்பினர்கள் தமிழக வெற்றி கழகத்துடன் செல்லலாம் என கருத்து தெரிவித்ததாக தெரிகிறது. மேலும் ஒரு சில உறுப்பினர்கள் அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைக்கலாம் என தெரிவித்ததாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் டாக்டர் ராமதாஸ் நேற்று தொண்டர்களுக்கு ஒரு கடிதம் எழுதி இருந்தார். அதில், நாம் பயணிக்க வேண்டிய தூரம் நீண்டது. ஆனால் கிடைக்கும் வாகனங்களில் பயணித்தால் இலக்கை அடைய முடியாது. நமக்கான வாகனம் இதோ நம் அருகே வந்து விட்டது. அதில் தான் நாம் பயணிக்க போகிறோம். நாம் இலக்கை அடைந்து, லட்சியத்தை வெல்வோம் என குறிப்பிட்டு இருந்தார்.

இந்த நிலையில் இன்று கூட்டணி குறித்து முடிவெடுப்பது சம்பந்தமாக டாக்டர் ராமதாஸ் தலைமையில் வன்னியர் சங்க மாநில நிர்வாகிகள், மாவட்ட செயலாளர்கள், மாவட்ட தலைவர்கள் மற்றும் பா.ம.க. முக்கிய நிர்வாகிகள், மாவட்ட செயலாளர்கள், மாவட்ட தலைவர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் திண்டிவனம் தைலாபுரத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் வன்னியர் சங்க தலைவர் பு.தா அருள் மொழி, எம்.எம்.ஏ.க்கள் ஜி.கே .மணி, அருள் மற்றும் பா.ம.க. முக்கிய நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். இந்த ஆலோசனைக்கூட்டம் முடிந்த பிறகு டாக்டர் ராமதாஸ் நாளை கூட்டணி சம்பந்தமாக அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆலோசனை கூட்டத்திற்கு வந்த பா.ம.க. கவுரவ தலைவர் ஜி.கே.மணி கூறும் போது, சொல்ல வேண்டிய தகவல் இருந்தால் டாக்டர் ராமதாஸ் உங்களிடம் சொல்வார் என்றார். அவரிடம் கூட்டணி குறித்து கேள்வி எழுப்பிய போது பதில் அளிக்காமல் சென்றார்.

இந்த நிலையில் கூட்டத்தில் பங்கேற்ற வந்த டாக்டர் ராமதாஸ் நிருபர்களிடம் கூறும்போது, வருகிற 28-ந்தேதிக்குள் கூட்டணி சம்பந்தமாக அறிவிக்கப்படும் என்றார்.

அவரிடம் திராவிட கட்சிகளுடன் கூட்டணி வைக்கப்படுமா? என கேள்வி எழுப்பிய போது, இருக்கும் என தெரிவித்தார்.

பின்னர் ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்றார்.

## தமிழ்நாட்டில் NDA கூட்டணி ஆட்சி... பா.ஜ.க.வில் இருந்து 20 அமைச்சர்கள் - இ.பி.எஸ்.க்கு செக் வைத்த நயினார்

**சென்னை, பிப்.27:** சென்னை அமைந்தகரையில் நடைபெற்ற பா.ஜ.க. பணிமனை திறப்பு விழாவில் மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

* சட்டசபை தேர்தல் பிரசாரத்திற்காக மார்ச் 1-ந்தேதி பிரதமர் மோடி தமிழ்நாடு வருகிறார்.

* பிரதமர் மோடி தமிழ்நாடு வந்து சென்ற பின்னரே அ.தி.மு.க.வுடன் தொகுதி பங்கீடு குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்படும்.

* பிரதமரின் தமிழக வருகைக்கு பின்னர் எடப்பாடி பழனிசாமியிடம் கலந்து பேசி அதன்பின் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை நடத்தப்படும்.

* தமிழ்நாட்டில் வெகு விரைவில் தேசிய ஜனநாயகக்கூட்டணி ஆட்சி மலரும்.

* எம்.ஜி.ஆர். வழியில் மக்களுக்கான கட்சியாக பா.ஜ.க. செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

* பா.ஜ.க. கட்சியில் இருந்து 20-க்கும் மேற்பட்ட அமைச்சர்கள் வருவார்கள்.

மத்திய அமைச்சர் பியூஸ் கோயல் நாளை தமிழகம் வர உள்ளதாகவும், நாளை அ.தி.மு.க.வுடன் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை நடக்கும் என்று வெளியான தகவலுக்கு அவர் மறுப்பு தெரிவித்தார்.

சில நாட்களுக்கு முன்பு சென்னையில் நடைபெற்ற INDIA TODAY கருத்தரங்கில் பேசிய எடப்பாடி பழனிசாமி, "NDA கூட்டணியில், ஆட்சியில் பங்கு என்ற பிரச்சனையே இல்லை. கூட்டணியில் இருப்போரும் அவ்வாறு கேட்கவில்லை" என்று தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது

## அனுமதியின்றி ஊடக விவாதங்களில் பங்கேற்கக்கூடாது - த.வெ.க.வினருக்கு கட்டுப்பாடு விதித்த புஸ்ஸி ஆனந்த்

**சென்னை, பிப்.27:** த.வெ.க. பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தலைமைக் கழகத்தின் அனுமதியின்றி, கழக மாநில மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள், தோழர்கள் யாரும் எவ்வித ஊடக விவாதங்களிலும் பங்கேற்கக் கூடாது.

பொதுவெளியில் நடத்தப்படும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், விவாதங்கள், நேரடிப் பேட்டிகள் மற்றும் யூடியூப் (YOUTUBE) உள்ளிட்ட சமூக ஊடகங்களுக்கு நேர்காணல் வழங்குவது உள்ளிட்டவை குறித்து, தலைமைக் கழகத்தின் முன்அனுமதி கண்டிப்பாகப் பெற வேண்டும்.

முன்அனுமதி பெறாமல், எந்தவிதமான மாநில அல்லது தேசிய ஊடகத் தளங்களிலும், விவாதங்களிலும் பங்கேற்பதோ அல்லது நேர்காணல் வழங்குவதோ கூடாது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com